
|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 12 ஶுபக்ருது வருஷ ஆனி-ஆடி மீ ஜூலை - 2023 இதழ் 7



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆனி – ஆடி

மலர் 12 ஜூலை – 2023 இதழ் 7

**பொருளடக்கம்**




| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| முகாம் நிகழ்ச்சிகள் | 18 |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 21 |
| ராஜ தரங்கிணி | 22 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 26 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 31 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 33 |
| தர்ம சாஸ்த்ரம் பூஜை சில விளக்கங்கள் | 35 |
| ஒன்பதாந் திருமுறை பதினோராந் திருமுறைகளும் அத்வைத சித்தாந்தமும் | 36 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 40 |
| புராணக் கதை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| தசாவதார ஸ்தோத்ரம் | 47 |



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*எல்லோரையும் ஆள்பவர்களுள் அன்னம் அதிபதி. அன்னத்துக்கு ஸ்வாஹா. அன்னத்துக்கே இது எமதன்று. அது எம்மைக் காப்பாற்றுக. ஸோமன் ஓஷதிகளின் அதிபதி. இது அவருடையது நமதன்று. அவர் எம்மைக் காப்பாற்றுக.*

*ஸவிதா பிறப்பிக்கும் சக்திகளுக்கு அதிபதி. அவருக்கு இந்த ஆஹுதி. எமதன்று, அவர் எம்மைக் காப்பாற்றுக. ருத்ரன் பசுக்களின் அதிபதி. அவருக்கு இந்த ஆஹுதி. நமதன்று அவர் எம்மைக் காப்பாற்றுக.*

*த்வஷ்டா உருவங்களின் அதிபதி. அவருக்கு இந்த ஆஹுதி. இது நமதன்று. அவர் எம்மைக் காப்பாற்றுக.*

*விஷ்ணு மலைகளின் அதிபதி. அவருக்கு இந்த ஆஹுதி. நமதன்று. அவர் எம்மைக் காக்க.*

*மருத்துக்கள் கணங்களுக்கு அதிபதி. அவருக்கு இந்த ஆஹுதி. அவர் எம்மைக் காக்க.*

*ஜீவபித்ருக்களும் பிதாமஹர்களும், பரலோகம் சென்ற பித்ருக்களும் ஏழு தலைமுறை பித்ருக்களும், கீழானவர்களும் எல்லா பித்ருக்களும் எம்மைக் காக்க.*

*ஞான ஐஸ்வர்ய வ்ருத்திகரமானதும், மங்களமானதும் இப்போது செய்யப்படும் தேவர்களை கூவி அழைக்கும் இந்த கார்யத்தில் பிதிர்களுக்கு இந்த ஆஹுதியை அளிக்கிறோம். இது அவர்களுடையது. நமதன்று. அவர்கள் எம்மைக் காக்க.*

*[அதர்வண வேதம் 5ஆம் காண்டம் யஜுர் வேதம் ஜயாதி ஹோமம்]*

# ஆசிரியர் பக்கம்

'' நமது வேத சாஸ்த்ரங்களில் எங்கேயும் ஆர்யன் த்ராவிடன் என்பதை ரேஸாகச் சொல்லவில்லை. Divide & rule படி வெள்ளைக்காரர்கள் கட்டிவிட்ட கதை இது. பாரத தேசத்தில் இருக்கும் அனைவரையும் விந்த்ய மலைக்கு மேல் உள்ளவர்களை கௌடர்கள் என்றும் கீழே உள்ளவர்களை த்ராவிடர்கள் என்றும் பிரித்து வைத்தார்கள்.''

மகா ஸ்வாமிகள்

மேலே சொன்னது முற்றிலும் உண்மை. இந்த உண்மை ப்ரிட்டிஷ்காரர்களால் மறைக்கப்பட்டது. சுதந்திரம் வந்தபின் அழுத்தம் காட்டி நாடெங்கும் பரப்பப்பட்டது. Secular பூத பிசாசு ஒன்று சொல்ல வைத்தது. இதன் சில அம்சங்கள்.

1. ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக வந்தனர்.
2. இங்கிருந்த த்ராவிடர்களைத் துரத்தினர்.
3. ஹாரப்ப மொஹஞ்சடாரோ நாகரிகம் த்ராவிட நாகரிகமே.
4. வேதங்களின் காலம் கி. மு. 1500.

இன்னும் பல பொய்யுரைகளை சரித்திரம் என்னும் பெயரில் பாடபுத்தகங்களில் எழுதி மாணவர்களைக் கெடுத்தனர். இதைச் செய்தவர்களில் முக்யமானவர்கள் ரோமிலா தாப்பர், இர்ஃபான் ஹமீத், அர். கே. சர்மா. இவர்கள் அனைவரும் JNUவைச் சேர்ந்தவர்கள். அரசாங்கமும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

மெல்ல மெல்ல சிலர் மீண்டும் ஆராய்ச்சி செய்து ஆரியன் த்ராவிடன் என்பது race இல்லை. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்பதை DNA பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தினர். லோதல் ஐஹோல் இடங்களில் கிடைத்தச் சான்றுகள் இதை உறுதிப்படுத்தின. உடனே ஒரு பல்டி. ஆர்யன் இன்வேஷன் இல்லை இம்மிக்ரேஷன் என்று கூற ஆரம்பித்தனர். அயோத்யை விஷயத்தில் ராமரே இல்லை என்று ஒரு போடு போட்டவர்கள் தான் இந்த JNU மேதாவிகள். இவர்கள் யாரும் ஒரு விஷயத்தைக் கவனிக்கவில்லை. கவனித்தும் அசட்டையாய் இருந்தனர்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் இருந்த வையாபுரிப் பிள்ளை, ஸ்வாமிகண்ணுப் பிள்ளை, உ.வே ஸ்வாமினாத ஐயர், ஸதாசிவப் பண்டாரத்தார் போன்ற சான்றோர்கள் ஆர்ய த்ராவிட விஷயம் பற்றியும் தமிழ் நூல்களைப் பற்றியும் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து பாரதீயர்கள் ஒரே இனம் என்பதை உறுதிப்படுத்தினர். இது தவிர தமிழர்களின் இலக்கணத்தையும், வாழ்வையும் கூறும் 'தொல்காப்பியம்' இதை உறுதிப்படுத்தும். அதைச் சற்று பார்ப்போம்.

**'' மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்''**

மாயோன் விஷ்ணு எனவும் சேயோன் முருகன் எனவும் வேந்தன் இந்த்ரன் எனவும் வருணன் கடல் தெய்வம் எனவும் அறியப்படும். மேலும் சிவ பெருமான் இவர்களுக்கு அதிபதியாகவும் கொற்றவை எனப்படும் தெய்வம் துர்கை எனவும் அறியப்படும். மேலும் தமிழ் கூறும் நல்லுலகம் தன் நிலப்பரப்பை ஐந்தாகப் பிரித்தது. முல்லை, மருதம் நெய்தல், குறிஞ்சி, பாலை என்று பெயரும் கொடுத்து அந்தந்த நிலப்பரப்பிற்கு உரிய தெய்வங்களையும் தெரிவிக்கிறது. சான்றாக முல்லை இந்த தெய்வங்கள் எல்லாம் வேதம் கூறிய தெய்வங்களே அன்றி வேறல்ல.

இந்த நிலப்பாகுபாடு மிக முக்யமானது. பாரதம் பல ராஜ்யங்களாகப் பிரிந்து இருப்பினும் ஒரே சரித்ரத்தை கொண்டுள்ளது. ஆர்ய சம்ப்ரதாயம் சொல்லும் கடவுட்களைத் தான் த்ராவிட ஸம்பர்தாயமும் போற்றியது. மொழிகள் வெவ்வேறாயினும் இனப்படி ஒரே பாரதீயரே. இதில் எங்கு race வந்தது?

இன்னொரு சான்று இந்த்ர விழா என்னும் பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டது என்பதை சிலப்பதிகாராம் விரிவாகக் கூறும். வேதக் கடவுள் இந்த்ரன் தானே இந்த இந்த்ரன். மேலும் ஒவ்வொரு வர்ணத்திற்கும் அடையாளங்களை தொல்காப்பியம் கூறும்.

தொல்காப்பியம் மட்டுமல்ல பல தமிழ் நூல்கள் (புற நானூறு, அக நானூறு, பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், பதிற்றுப்பத்து) இந்த உண்மையை அதாவது வேத நாகரிகம் பாரதம் முழுவதற்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளன. நமது துரதிர்ஷ்டம் குயுக்தி மேதாவிகள் இந்த உண்மையை (தமிழ் நல்லுலகம்) அதிகாரத்தாலும் ப்ரசாரத்தாலும் மறைத்தனர் . Aryan dravidiyan என்று இனவாதம் பேசி மாணவர்களை மயக்கினர். இரண்டு தலை முறை உண்மை தெரியாமல் வீணடிக்கப்பட்டது. கலாசார நாசம் நடந்தது. இப்போதுதான் உண்மைகள் வெளிவர துவங்கியுள்ளன. ஆசார்ய ஸ்வாமிகள் சொன்னது போல் ஆர்யன், த்ராவிடன் என்பது மொழி, ஸம்ப்ரதாய வழியே அன்றி இன பேதமல்ல என்பதை எல்லோரும் உணர வேண்டும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம். இது குறித்து இரண்டு நூல்களை Referenc Value விற்காக பரிந்துரைக்கிறேன். தொடர்புடைய நூல்கள் தமிழ் நூல்களில் வேதம் வேதியர் வேள்வி, ஆசிரியர் பசுபதி, 2012 காமகோடி ப்ரதீபம் :- வேதங்கள் ஏற்றம் போற்றும் தமிழ் நூல்கள் ஆசிரியர் K.C. லக்ஷ்மீ நாராயணன்.

ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!


ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## துதியின் ஸாரம் : ஸம்ஸாரத் துன்ப நீக்கம்



முதல் ச்லோகத்தில் 'தாரய ஸம்ஸார ஸாகரத:'- ஸம்ஸார ஸாகரத்திலிருந்து அக்கரை சேரு!'' என்று ப்ரார்த்தித்தார். அடுத்த ச்லோகத்தில் 'ஸம்ஸார பயத்தையும் வேதனையையும் சிதைக்க வல்லதான பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன்'': **''பவபய கேத-ச்சிதே வந்தே''** என்றார். மூன்றாவதில் ஸம்ஸாரத்தைப் பற்றி ரெஃபரன்ஸ்' இல்லை. பரமாத்ம - ஜீவாத்மாக்கள் ஒன்றேயானாலும் வ்யவஹாரத்தில் ஸமுத்ரமும் அலையும் மாதிரி இருப்பவர்கள் என்று அதில் சொல்கிறார். யோசித்துப் பார்த்தால் இதிலும் ஸம்ஸார ஸமாசாரம் உட்கிடையாக இருக்கிறது. வ்யவஹார நிலை என்பதுதான் ஸம்ஸாரம். அதையேதான் பொதுவாக ஸமுத்ரம் என்பது. (முதல் ச்லோகத்தில் வரும் ஸாகரம் ஆறாவதிலே வரும் 'ஜலதி' என்பனவற்றுக்கு ஸமுத்ரம் என்றே அர்த்தம்.). இந்த ஸம்ஸார ஸமுத்ரத்திலே அடிபட்டு, முழுகிப் போகாமலிருக்க வழி, இப்படி இதிலே த்வைதமாக உள்ளபோதுகூட, 'நாம் இந்த ஸமுத்ரத்தின் அங்கமல்ல. பரமாத்ம ஸமுத்ரத்தின் அங்கம்தான், அதன் அலை தான். அலை ஸமுத்ரத்தில் ஒடுங்கி ஒன்றாய்விடுகிறது போல நாம் பரமாத்மாவிலேயே ஐக்யமாகி விடவேண்டியவர்கள் தான் என்ற நினைவுடன் இருப்பதேயாகும். ஸமுத்ரம் தானே அலையாக ஆகியிருப்பது? அப்படி பரமாத்மா அல்லவா நாமாக ஆகியிருப்பது? அவன் நினைவோடு அவனுடைய அலை நாம் என்ற உறுதியோடு இருந்தால் இந்த ஸம்ஸார ஸமுத்ரம் நம்மை என்ன பண்ண முடியும்?' என்று மூன்றாம் ச்லோகம் எண்ண வைக்கிறது. அத்வைதப் பார்வையில் பார்த்தபோது அதில் த்வைதத்தின் நைச்யம் (எளிமை, தாழ்மை) இருப்பதாகச் சொன்னேன். த்வைதமான ஸம்ஸாரத்தின் கோணத்தில் பார்க்கும்போது 'ஸமுத்ரத்துக்கு வேறாக இல்லாத அலை மாதிரி பரமாத்மாவுக்கு 'நாம்' என்கிற கருத்தே

அத்வைதத்தின் கம்பீரத்தை நமக்கு அழுமூஞ்சி ஸம்ஸாரத்திலும் ஊட்டுவதாகத் தெரிகிறது. நாலாம் ச்லோகத்திலும் ஸம்ஸாரத்தைப் பற்றி வருகிறது. 'பகவத் தர்சனம் கிட்டிவிட்டபின் ஸம்ஸாரத்தின் அழிவு எப்படி ஏற்படாமலிருக்கும்?- **ந பவதி கிம் பவ திரஸ்கார :''** என்று அது கேட்கிறது. அடுத்த ச்லோகத்தில், ஸம்ஸார தாபத்தில் பீதியுற்ற தம்மை பகவான் பரிபாலிக்க வேண்டிக்கொண்டார். **'பவதாப பீதோஹம்''** என்று அதில் வருகிறது. கடைசியான ஆறாவதில் ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து அம்ருதமான ஆத்ம தத்வத்தைக் கடைந்து கொடுக்கும் மத்தாக பகவானை வர்ணிக்கிறார். ஆக ஸமய அநுஷ்டானங்கள், ஆத்மிகமான ஸாதனைகள் ஆகிய எல்லாவற்றுக்கும் ஒரே லக்ஷ்யமான ஸம்ஸார கஷ்ட நிவ்ருத்தியை பக்தியில் ஆரம்பித்துப் பெற முயல்வதே ''ஷட்பதீ'' யின் ஸார தத்வம் என்று தெரிகிறது.

**பரமம் தரம் அபநய த்வம் மே** என்று இந்த ச்லோகம் முடிகிறது.

'தரம்' என்றால் பயம் என்று அர்த்தம். மே - எனக்கு (அதாவது என்னுடைய;) பரமம் - மிகுந்த; தரம் - பயத்தை த்வம் - நீ; அபநய - போக்குவாயாக!

உருப்படுவோமோ மாட்டோமோ, கதிமோக்ஷம் கிடைக்குமோ கிடைக்காதோ என்கிற பயம், மரண பயம் மறுபடியும் ஜன்மா வந்துவிடுமோ என்கிற பயம், நம் பாபங்களை நினைத்து நரக பயம்-இப்படிப் பல தினுஸாகப் படுகிற பெரிய ஸம்ஸார பயத்தைப் போக்க பகவானிடம் ப்ரார்த்தனை செய்கிறார்.

(தொடரும்)

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சிறப்பு அருளுரைகள்


இங்கே பி. எச். எஸ். ஸ்கூலில் படிக்கிற குழந்தைகளுக்கு மதியம் ஒரு மணி நேரம் வேதம் சொல்லித் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது மைலாப்பூரில் நடக்கிறது.

மற்றும் குரோம்பேட்டையில் 40 பேர் வேதம் படிக்கிறார்கள். மாம்பலம் ஓரியண்டல் ஸ்கூலில் 100 பிள்ளைகள் வேதம் படிக்கிறார்கள்.

நம்முடைய தாத்தாக்கள் எல்லாம் சாஸ்திரிகளாகத்தான் இருந்தார்கள். சாஸ்திரிகள் இல்லாமல் யாரும் இருந்ததில்லை. அவர்கள் பெயரைக் கேட்டாலே தெரியும்.

ஆனால் அடுத்த தலைமுறையிலே வேதப் படிப்புகள் விட்டுப் போய் விட்டது. எல்லாமே இஞ்ஜினியர், டாக்டர், அட்வகேட் என்று போய் விட்டது.

சரி, குறைந்தது இந்த தலைமுறையையாவது வேதம் படிக்க வைப்போமே என்று சராசரி பள்ளிப் படிப்போடு சேர்த்து படிக்க வைக்கலாம் என்று இருக்கிறோம்.



இரண்டு படிப்பையும் சேர்த்து படிப்பதால்- விலைவாசியும் ஏறிப் போய்விட்டதால் வாத்தியாருக்கும் கொடுத்து முடிகிற காரியம் இல்லை.

ஒரு வாத்தியார் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். செத்துப் போன ஒருவருக்கு கர்மா பண்ணவே முடியவில்லை. அவ்வளவு சொத்தும் போய் விட்டது. ரொம்பக் கஷ்டம் என்று கூறுகிறார்.

இங்கிலீஷ் படிக்கிறவர்களையும் வேதம் படிக்க வைத்தால் நிறையப் பேர் வேதம் படித்தவர்களாகி விடுவார்கள்.

அதனால்தான் இத்திட்டத்தை துவங்கி இருக்கிறோம்.

முழுநேர வாத்தியாரிடம்தான் ஆசீர்வாதமும் அக்ஷதையும் வாங்கிக் கொள்ள வேண்டும். முடிந்த வரை நாமே காரியங்களைச் செய்ய வேண்டும்.

முன்பெல்லாம் பரம்பரை பரம்பரையாகப் படித்துக் கொண்டு இருந்தார்கள். இப்போது அதுவெல்லாம் ரொம்பவும் குறைந்து போய்விட்டது.

வாத்தியார் வீடுகளிலே கூட வேதம் படிக்கிறவர்களைப் பார்க்க முடிவதில்லை.

ஏதோ ஒரு சில வீடுகளில் தான் வேதம் படிக்கிறார்கள். மற்ற எல்லாருமே இஞ்சினியரிங் காலேஜூக்குத் தான் இடம் பிடிக்கச் செல்கிறார்கள்.

அவாளுக்கும் கூட ஒரு ஆசை இருக்கிறது... நம்ம பிள்ளை எப்போதும் வேதம் படித்துக் கொண்டு நம்முடனே இருப்பதைவிட வெளியே போய் பெரிய படிப்பு படித்து நல்லா வாழட்டுமே, என்று நினைக்கிறார்கள். அது ஒன்றும் தப்பல்ல.

அதே நேரத்தில் சமுதாயத்தையும் பார்க்க வேண்டும். கர்மாவையும் பார்க்க வேண்டும். இந்து மதத்தையும் பார்க்க வேண்டும்.

நம்முடைய கடமை, நம்முடைய தர்மம், நம்முடைய ஆத்மார்த்தமான செயல்கள் அனைத்தும் வேதத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

நான் மடத்துக்கு வந்தது ஜெய வருஷம். அவர் பிறந்த வருஷமும் ஜெய வருஷம். அந்த வருஷமே அவருக்கு சஷ்டியப்த பூர்த்தி செய்யலாம் என்றார்கள்.

அவரோ, இந்த சன்னியாசிக்கு எதற்கு சஷ்டியப்தி. இருந்தாலும் பண்ணிக் கொள்கிறேன். ஆனால் ஒரு கண்டிஷன். வேத பாஷ்யம் படிக்கிறவர்கள் ரொம்பக் குறைந்து போய்விட்டார்கள். அவர்களை நிறையக் கொண்டு வாருங்கள். உற்சாகப்படுத்துங்கள். வேதம் படிப்பவர்கள் பெருகிவிட்டாலே எனக்கு சஷ்டியப்த பூர்த்தி போல ஆகும் என்றார்.

அப்போது வினோபாவே பூமிதான இயக்கம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது எல்லோரும் கிராமம் கிராமமாகப் போய் நூற்றுக்கணக்கான ஏக்கராக்களைச் சேர்த்து அந்த ஆதாயத்தை எடுத்து வேதபாஷ்ய ட்ரஸ்ட்டை ஆரம்பித்து, சந்திரசேகரா ட்ரஸ்ட்டை ஆரம்பித்து, சஷ்டியப்த ட்ரஸ்ட்டும் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்.

இன்றைக்கும் அந்த வேத பாஷ்ய ட்ரஸ்ட் இருக்கிறது. வேதம் படிப்பவர்கள் குறைந்து போனதால் சமுதாயத்திலே பலவிதமான அசௌகரியங்கள் நடந்து கொண்டு வருகிறது.

வேதம் கேட்பவர்கள் கூட்டமும் குறைந்து விட்டது. கடைப்பிடிப்பவர்கள் கூட்டமோ ரொம்பக் ரொம்பக் குறைந்து போய்விட்டது.

கர்மானுஷ்டானத்தை சந்தியா, வேளைகளில் ஆரம்பித்து எந்த அளவுக்கு கடைப்பிடிக்கிறோமோ அந்த அளவுக்கு சித்த சுத்தி நமக்கு ஏற்படும். மனச்சுத்தி ஏற்படும்.

கர்மா, பக்தி, ஞானம் தேவை. பிரத்யட்சப் பலன் கிடைப்பது ஒன்று. அப்பிரத்யேட்சப் பலன் கிடைப்பது ஒன்று. அதனால் மனதுக்கு சாந்தி சுகம் கிடைக்கும்.

நாம் பண்ணுகிற கர்மாக்களால் நமக்கு சந்தோஷம் கிடைப்பது மட்டுமல்ல, தேசத்துக்கு சந்தோஷம் கிடைத்து-மனத்துக்கும் மிகப் பெரிய சமாதானம் கிடைக்க வாய்ப்பு இருக்கும்.

மனத்தை சுத்தப்படுத்த கர்மா தேவை. கர்மா என்றால் அபர கர்மா, சாந்த கர்மா மட்டும் அல்ல. தினப்படி வேள்விகளும் செய்ய வேண்டும். அந்தக் கர்மாக்களால் தேகத்துக்கு நல்லது கிடைக்கும். அதன் மூலம் பக்தியும், பக்திக்கு அடுத்தபடியாக ஞானத்துக்குப் போவதற்கும் பயன்படும்.

கர்மா, பக்தி, ஞானம் என்பது... எவ்வளவு கர்மா செய்கிறோமோ, எவ்வளவு பூஜை புனஸ்காரம் செய்கிறோமோ, பாராயணம் செய்கிறோமோ அந்த அளவுக்கு மனதுக்குப் பலன் கிடைக்கும்.

சரீர சுத்திக்குத் தண்ணீரில் ஸ்நானம் பண்ண வேண்டும். வேட்டி, புடவைகளை சுத்தமாக்க வண்ணான்கிட்டே போடணும். ஆனால் மனசு சுத்தமாவதற்கு இந்த இரண்டு மட்டும் லாயக்குப் படாது.

நல்ல கர்மாக்களை நல்ல பக்தியோடு செய்வதற்கு 'ஸ்லாகிதம்' என்று பெயர். நல்ல ஸ்லாகியத் தோடு செய்வதுதான் இந்து மதத்திற்கும், வேதத்திற்கும் அடிப்படை. அதுதான் அடிப்படை.

அதை விட்டுவிட்டு, பக்தி பக்தி பக்தி என்று பக்தி மட்டும் காட்டினாலும் பகவான் அதையும் ஏற்றுக்கொண்டு ஆசீர்வாதம் பண்ணுவார். ஆனால் அது ஒரு பங்குதான் உண்டு.

நான் அடிக்கடி சொல்வது உண்டு. பகவத்கீதை படிக்கணும். அதில் புண்ணியம் உண்டு. ஆனால் அதன் அர்த்தம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்தினால், ஆயிரம் மடங்குப் புண்ணியம் உண்டு.

என்னிடத்தில் மனதை வைத்து என்னிடத்தில் நமஸ்காரம் பண்ணு, என்னிடத்தில் பூஜை பண்ணு என்று பகவான் சொல்கிறார். அப்படிச் செய்தால் என்னையே நீ அடையலாம் என்றார்.

பகவத் கீதைக்கு என்ன தாத்பர்யம் உண்டோ அதுதான்-அதேதான் நம் வைதீக முறைக்கும் தாத்பர்யம் ஆகும். அதெல்லாம் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்கிறது.

நீ எப்படி இருக்க வேண்டும்? இப்படி இரு... அப்படி இரு... என்று தெளிவாகக் கட்டளை இருக்கிறது.

அவைகளை நாம் படிப்பது மட்டும் போதாது. படிப்பது ஒரு புண்ணியம்; ஒரு சம்ஸ்காரம். ஒரு எண்ணம். ஆனால் அதை கடைப் பிடித்தோமானால் அது தரும் லாபம் பெரியது. அந்த லாபம் குறைந்து போனதால்தான் தேசத்தில் எங்கும் அசாந்தி நிலவுகிறது.

பணத்தைக் கொட்டித் தர்மம் பண்ணுகிறார்கள். ஹோமம் பண்ணுகிறார்கள். முக்கால்வாசிப் பேர் பணத்தையும் கொட்டி எவ்வளவோ தான தர்மம் பண்ணுகிறார்கள்.

ஆனால் சுதர்மத்தை விட்டுவிட்டு இவ்வளவு தர்மங்கள் செய்து என்ன பலன்?

### சுதர்மே நிதனம் ச்ரேய:

பகவான் கீதையில் சுதர்மத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் செத்துத் தொலை என்று சொல்லி இருக்கிறார்.

### பர தர்மம் பயாவஹ

பரதர்மத்தைப் பிடிக்காதே என்றார்.

அன்றைக்கு பரதர்மத்தில் கிறிஸ்து, முஸ்லிம் வரவில்லை. 'அத்வைத வேதாந்த வழியைத் தவிர எந்த வழியிலும் போய்விடாதே. அது தப்பு' என்று கூறினார்.

யார் யாருக்கு என்னென்ன கடமைகள் என்னென்ன காரியங்கள் செய்யணும்னு பரம்பரை பரம்பரையா விதிக்கப்பட்டிருக்கிறதோ, அதைச் செய்தால் போதும். அதுதான் சுதர்மம். அதை விட்டு விட்டு மற்ற காரியங்களைச் செய்தால், அது பர தர்மம் என்று அந்தக் காலத்திலேயே சொன்னார்கள்.

உதாரணமாக, படிக்க வேண்டிய வயசுப் பையன் படிச்சான்னா அது தர்மம்.

வயதான பிறகு நல்ல கிரகஸ்தனாக இருந்து கொண்டு, பூசை, புனஸ்காரம் பண்ணி பாராயணம் பண்ணி, அடுத்தவர்களுக்கு வழி காட்டுபவனாக இருப்பதும் ஒரு தர்மம்.

இப்படி அவரவர்க்கு ஒரு தர்மத்தையும், நியாயத்தையும், கடமையையும் வைத்தார்கள். இது இருந்தவரை எல்லாம் நன்றாக இருந்தது.

ஆனால் இன்றைக்கு வயதானவர்கள் எல்லாம் ஏ.சி. ரூம்களுக்கு உள்ளே போயாச்சு. காரணம், இடைவெளி வந்து போச்சு.

ஒருத்தர் பேசி இன்னொருத்தர் கேட்கணும் என்கிற வழக்கம் போய் விட்டது. பெரியவர்கள் குழந்தைகளுக்காக வளைந்து கொடுக்க வேண்டும். குழந்தைகளும் பெரியவர்களுக்காக வளைந்து கொடுத்து அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்.

எல்லாம் கல்யாணம் ஆகிறவரைக்கும் கேட்டுக் கொண்டு இருப்பான். கல்யாணம் ஆனபிறகு 'அப்பா யாரு? அம்மா யாரு?' என்று கேட்க ஆரம்பித்து விடுவான்.

அந்த மாதிரியான இடைவெளி வந்துவிட்டது. அந்த மாதிரி இடைவெளி வராமல் பார்த்துக் கொண்டாலே அதுவே பெரிய தர்மம்.

அப்பா அம்மாவைக் காப்பாத்துறதுதான் சுதர்மம். இரண்டு பக்கமும் பார்த்துக் கொள்ள வேண்டும். கணவன் தன் பெற்றோரையும் காப்பாற்ற வேண்டும். மனைவியின் பெற்றோரையும் காப்பாற்ற வேண்டும். இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டால் சுதர்மம்.

ஒருத்தரை மட்டுமே சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டு, ஒருத்தரை அழ வைப்பது சரியில்லை. யாரையும் வயசான காலத்தில் அழ விடக்கூடாது. திருப்திப் படுத்தணும், சந்தோஷப்படுத்தணும். அதுதான் நம்முடைய முக்கியமான தர்மம்.

பிரம்மச்சாரியார் தர்மம், இல்லறத்தார் தர்மம் என்று எல்லோருக்குமே தர்மம் இருக்கிறது. திருவள்ளுவரே இல்லறத்தார் எப்படி இருக்க வேண்டும் என்று பாட்டுப் பாடியிருக்கிறார்.

நம்ம வடமொழிகளில் எவ்வளவு நீதிநூல்கள் இருக்குமோ, ஆசார நூல்கள் இருக்குமோ, அவ்வளவும் நம் தமிழ் மொழியிலும் இருக்கின்றன.

அந்த நூல்கள் எல்லாம் லைப்ரரியில் தான் இருக்கிறது. அவற்றைப் படிச்சுக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றை நினைவுபடுத்துவதற்காகத்தான் இதுபோன்ற சபைகளில் சொல்கிறோம்.

நாம் எதற்காக வந்தோம்... என்ன செய்யணும்... எங்கே போக வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய தர்மத்தை போதித்த ஆதி சங்கரர், தட்சிணாமூர்த்தியை இன்றைக்கு நினைவு கூற வேண்டும்.

முதல் குரு தட்சணாமூர்த்தி. அடுத்த குரு கிருஷ்ணர். அவர் பகவத் கீதை மூலமாக மக்கள் மத்தியில் தர்மத்தைச் சொன்னார். கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் உட்கார்ந்து கொண்டு கீதையைச் சொன்னார். ஆனால் ஒருத்தர் காதிலேயும் அது விழவில்லை.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஸ்கந்த ஷஷ்டி



**ஸ்ருதி ஸ்ம்ரிதி புராணானாம் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத் பாதம் சங்கரம் லோக சங்கரம்**

வேதோ அகிலோ தர்ம மூலம்-அப்படின்றதாக ஒரு வாக்கியம் இருக்கு. லோகத்திற்கு தர்மம் என்பது முக்கியமான விஷயம். வெவ்வேறு விதமான ஜனங்கள், லோகத்திலே வசிக்கிறா. வெவ்வேறு விதமான பிராணி ராசிகள், ஜந்துக்கள் இந்த பூலோகத்தில் இருக்கு.

ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் சக்தி விதம் வேற. சிலருக்கு பேசற சக்தி நல்ல இருக்கும். சிலருக்கு ஓட முடியும். சிலருக்கு யோசிக்க முடியும். சிலருக்கு அச்சு போட்டா மாதிரி எழுத முடியும். சில பேருக்கு எல்லாமே முடியும். இப்படி, ஒவ்வொரு விதமான சக்தி ஒவ்வொருவிதமான அபிப்ராயங்கள், சிலருக்கு கோவில் கோவிலா பார்க்கத் தோணும். சில பேருக்கு கச்சேரி கேட்கணும் என்று தோணும். சில பேருக்கு பிரதக்ஷினம் பண்ண வேண்டும் என்று தோணும். சில பேருக்கு உட்கார்ந்திருந்தே ஜபம் பண்ணலாம் என்று தோணும்.

ருசி என்பது விசித்திரமானது. ஒவ்வொரு புருஷாளுக்கும் வித்தியாசப்படுகிறது. இன்னைக்கு பிடித்தது நாளை, பிடிக்க மாட்டேன்கிறது. நாளைக்கு பிடித்தது, நாளை மறுநாள் பிடிக்க மாட்டேன்கிறது. ஒரு மனுஷாளுக்கு, ஒவ்வொரு சமயம், ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கு. இப்படி, இந்த விசித்திரமான உலகத்தை, நல்ல விதமா நடத்த வேண்டும். எல்லோரும் சுமூகமாக இருக்கணும். எல்லோரும் சாந்தமா இருக்கணும். எல்லோரும், பிரியமா

இருக்கணும். எல்லோரும் கட்டுப்பாட்டோடு இருக்கணும். எல்லோரும் நல்லது செய்வதற்கு பார்க்கணும். அப்போது எல்லோரையும் சேர்க்கக் கூடிய விஷயம் ஒன்று வேணும். அந்த விஷயம் நல்ல விஷயமாக இருக்கணும். சேர்க்கிற விஷயம் இருக்கு. கூட்டம் பல இடத்திலேயும் கூடுகிறது. ஆனால் நல்ல விஷயத்திற்காக ஒன்று சேர வேண்டும். அந்த நல்ல விஷயத்திற்காக சேரும்போது, அந்த நல்ல விஷயம் என்ன?

நல்லது என்பதனாலே, சௌகர்யம் ஏற்பட வேணும். மற்றவாளுக்கு கஷ்டம் ஏற்படக் கூடாது. நமக்கு சௌகரியம் வரணும். மற்றவாளுக்கு கஷ்டம் வரக் கூடாது. அந்த மாதிரியான விஷயம் என்ன என்று பார்த்தால், அது தர்மம். அந்த தர்மத்தைப் பற்றித்தான் வால்மீகி இராமாயணம் ஆரம்பிக்கிறது. மூன்று உலகத்தையும் பற்றி தெரிந்த ஒரு மகரிஷி, பாதாள லோகம். இப்பொழுது நாம் உற்காந்து கொண்டு இருக்கோமே பூலோகம். மேல் இருக்கக் கூடிய சொர்க்காதி லோகங்கள். இந்த மூன்று லோகத்தையும் தெரிந்தவர், அவருக்கு நாரதர் என்று பெயர். அந்த நாரதரைக் கேட்டால் தெரியும், யார் இந்த உலகத்தில் நல்லவர். தர்மம் தெரிந்தவா யாரு? தர்மத்தை செய்யக் கூடியவா யாரு? யாரைப் பார்த்து, தர்மத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்? அப்படிப் பட்ட மனுஷன் யாரு? அப்படி என்று ஆசை வந்தது. அதை யார் கேட்டால் தெரியும்? அது எல்லா இடத்தையும் பார்க்கிறவர்களைக் கேட்டால் தெரியும். எல்லா இடத்திற்கும் போயிட்டு வரவா. சிலபேருக்கு, சில இடத்தில் அனுமதி இருக்காது. வேறு சில இடத்துக்கு போகப் பிரியப் படமாட்டா, சில பேருக்கு தைரியம் வராது. இவர் அப்படி இல்லை. தேவரிடமும் போகக் கூடியவர். அசுரர்களிடமும் போகக் கூடியவர். எல்லோரிடமும் தைரியமாக பகவன் நாமாவை சொல்லக் கூடியவர். சில பேர், அங்கே போனா, அப்படி மாற்றிக்கிலாம் சங்கோஜம் இல்லாமல், பகவன் நாமாவை தைரியமாக சொல்லக் கூடியவர். நல்ல விஷயம் பண்ணுவதற்கு தைரியமும் வேணும். நல்ல விஷயம் என்ன என்பது தெரிந்தும் இருக்கணும். எல்லோருக்கும் நல்லதை எப்படி சொல்லலாம் என்றும் தெரிந்து இருக்கணும். அப்படிப்பட்டவர் இந்த நாரத மகரிஷி. அவரிடம் கேட்டா-இப்படிப் பட்டவா யாரு தர்மம் தெரிஞ்சவா?

தியாகம் பண்றவரா இருக்கணும். தைரியம் இருப்பவரா இருக்கணும். பொறுமையோடு இருப்பவரா இருக்கணும். அவசரப்படாமல், பொறுமையோடு இருப்பவராய் இருக்கணும். உண்மை பேசுவராய் இருக்கணும். இது மாதிரி, குணங்கள் ஒரு லிஸ்ட் போடறா. இப்படியெல்லாம் இருப்பவர், யாராவது இருக்காரா?

**தனதேன ஸம: த்யாகே, சத்யே தர்ம யுவா பரகா, ஷமயா பிரிதிவி ஸம:, தைரியே ஹிமவான் இவ,** அப்படிச் சொல்லி, விஷ்ணுனா சஹஜ:- வீரத்தில் மஹா விஷ்ணு போல் இருக்கக் கூடியவர். எல்லா குணங்களும், தம ஏவ குண சம்பன்னம். அப்படிப் பட்டவர் யாருன்னு சொன்னா. ராமர் என்று சொல்றார். அந்த ராமரின் கதைதான் இராமாயணம். அந்த ராமாயணம் என்பது வேதத்தின் சாரம்.

**வேத: ப்ராசேதச ஸாசீத், ஸாக்ஷாத் ராமாயணாத்மனா**

அந்த வேத அபிப்ராயத்தை, நல்ல லலிதமான பத்யன்களிலே, ஸ்லோக ரூபத்திலே, கதையாகச் சொல்லி அழகாகக் கொடுத்து இருக்கா. அப்படிப்பட்ட, அந்த ராமாயணத்தின் மூலமாக, பல லட்சக் கணக்கான மக்கள் ஒரு சந்தோஷம் அடையரா. அந்தக் கதையை படிப்பதின் மூலமாக, கேட்பதின் மூலமாக, அதை பாட்டில் கேட்டாலும் சரி, ராம நாமம் எழுதினாலும் சரி- **ராமோ, ராமோ, ராம இதி ப்ரஜாநாம் கதா:**

எல்லோரும், ராமர், ராமர் என்று கொண்டாடினார்கள். ராமருடைய காலத்திலே. ஏனென்றால், எல்லோருக்கும் நல்லது பண்ணினார், நல்லது பண்ணனும் என்று நினைத்தார். அதனால், அவரை எல்லோரும் கொண்டாடினா. பாடினா. அந்த ராமாயணத்தை, வேதத்தை அடிப்படையாக வைத்து எழுதினா. அந்த வேதம் தான், தர்மத்திற்கு அடிப்படை, ஆணிவேர் அப்படிப்பட்ட இந்த வேதங்களைப் படிக்கக் கூடிய, அத்யயனம் பண்ணக் கூடிய ஒரு, வாய்ப்பை, சந்தர்ப்பத்தை, அவகாசத்தை, அதிர்ஷ்டத்தை, நீங்கள் எல்லோரும் பெற்று, இம்மாதிரி, பல வேதங்கள் படித்தவாளும் இங்கு வந்திருக்கேள். என்னைக்கு வந்திருக்கேள்.? நேற்று அக்ஷயத்திருதியை. இன்று வைசாக சுக்கல பஞ்சமி. சங்கர ஜெயந்தி அன்று வந்திருக்கேள். நேற்று கொடுப்பதற்கான நாள். நல்ல விஷயத்தையோ, நல்ல பொருட்களையோ, யாரை நாம் கௌரவப்படுத்துவோமோ, அவாளுக்கு எல்லாம் கொடுத்து, அதனால் சந்தோஷப் பட வேண்டிய நாள். அக்ஷயத் திருதியை. ஆனால், பிரசாரம் வேறு எதற்கோ ஆயிருக்கே தவிர, கொடுப்பதற்கான நாள் என்று பிரசாரம் ஆகவில்லை. அக்ஷயத்திருதியை தானம் கொடுப்பதற்கான விசேஷமான நாள். நேற்று அக்ஷயத்திருதியை.

இன்று சங்கர ஜெயந்தி. இந்த ஆச்சரியாள் தான், நீங்கள் என்ன அத்யயநம் பண்றேளோ, அந்த அத்யயனம் நல்ல விதமாக உலகத்திலே பிரச்சாரத்திலே இருக்கணும் என்று வேலை பண்ணினவர். இன்னிக்கி தர்மத்தை நாம் பல இடத்திலேயும் பார்க்கிறோம். கோவில் உற்சவங்களில் பார்க்கிறோம். கச்சேரிகளைப் பார்க்கிறோம். சாஸ்திர சதஸ் பார்க்கிறோம். கோவில் கும்பாபிஷேகம் பார்க்கிறோம். ரதோற்சவம் பார்க்கிறோம். அக்னி

வசந்த விழா என்று சொல்லி, தீ மிதி விழா பார்க்கிறோம். இது மாதிரி, பல உற்சவம் பார்க்கிறோம். பல புராண பிரவசனம் பார்க்கிறோம். பல பேர் கோசாலை நடத்துவதைப் பார்க்கிறோம். நிறைய பேர், பெரிய கோவில் இல்லை என்றாலும், ஏதோ ஒரு மரத்தடியிலே மஞ்சள் பூசி, குங்குமம் பூசி, மூணு கோடு பொட்டு, புள்ளி எல்லாம் வைத்து, செங்கல் இருந்தது என்றால், அதற்கு பூஜை பண்ணி, அதனால ஒரு சந்தோஷம், மனத்திருப்தி அடைவதைப் பார்க்கிறோம். துளசி பூஜை பண்ணுவதைப் பார்க்கிறோம். இது மாதிரி, பல நம்பிக்கைகளைப் பார்த்திண்டு இருக்கோம் உலகத்திலே. அதைப் படித்தவாளை கௌரவிப்பதாக இருக்கட்டும், தன்னோடு முன்னோர்களை கௌரவிப்பதாக இருக்கட்டும், சுவாமி, குலதெய்வத்தை பூஜிப்பதாக இருக்கட்டும். இப்படி, பல்வேறு சம்பிரதாயங்களை, பல்வேறு பழக்க வழக்கங்களை நாம் பார்த்திண்டு இருக்கோம். இது மூலமாக ஜனங்களுக்கு என்ன கிடைக்கிறது? தேவதா அனுக்ரகம் கிடைக்கிறது. மன சாந்தி கிடைக்கிறது. நல்ல பழக்க வழக்கங்கள் உண்டாகிறது. விடியக் காலையலே எழுந்துண்டு தனுர் மாச பூஜை நடத்தி, நித்தியம் முப்பது நாள் ஆராதனை பண்ணுவதனாலே அனுக்ரகமும் கிடைக்கிறது, ஆனந்தமும் கிடைக்கிறது.

இந்த மாதிரி ஒரு சாஸ்திரங்களையும், தர்மங்களையும் பார்க்கிறோம் என்றால், இதைப் பற்றி எடுத்துச் சொன்னவர் யார்? இது நல்ல விஷயம் தான். இது கேட்ட விஷயம் இல்லை. இது பண்ணினா நல்லது. வேத பாராயணம் பண்ணினா நல்லது. நாம சங்கீர்த்தனம் பண்ணினா நல்லது. ஹோமங்கள் பண்ணினா நல்லது. உபவாசம் பண்ணினா நல்லது. ஜோதிர்லிங்க ஷேத்திரங்கள் சென்று தரிசனம் பண்ணினா நல்லது. அரச மரத்தை சுற்றினால் நல்லது.

**மூலதோ பிரம்மா ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபினே,**
**அக்க்ரத சிவ ரூபாய, வ்ருக்ஷ ராஜாய தே நம:**

அப்படி சொல்லி, இந்த பக்தியை, படித்தவா, படிக்காதவா, ஏழைகள், பணக்காரா, கிராமத்தில் இருக்கிறவா, நகரத்தில் இருக்கிறவா, மலையிலே இருக்கிறவா, குட்டையின் ஓரத்திலே இருக்கிறவா- இப்படி வெவ்வேறு விதமான சௌகரியங்கள், வெவ்வேறு விதமான மனோபாவங்கள், வெவ்வேறு விதமான கலர்கள், வெவ்வேறு விதமான உயரங்கள், இப்படி வித்தியாசங்களுக்கு குறைவே இல்லை. வித்யாசங்கள் இவ்வளவு இருந்தாலும், அந்த வித்தியாசத்தின் நடுவிலே ஒரு சந்தோஷம், ஒரு நம்பிக்கை, ஒரு பிடிப்பு. இதைக் கொண்டு வந்தவா யாரு? அந்த தர்மம்.

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி



***மே 24*** *- ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் மூன்று கால ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர பூஜையை முடித்து வருகை தந்த பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். முகாம் திருப்பதியிலிருந்து மாலை பெங்களூருக்கு புறப்பட்டது.*

***மே 27-*** *இன்று காலை ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கமலாலயம் ஸ்ரீ மடத்தில் வரிசையில் நின்ற பக்தர்களுக்கு தரிசனம் வழங்கி அருளினார்கள். இரண்டு மணி நேரங்கள் கடந்த நிலையிலும் வரிசையில் நின்ற ஒவ்வொருவருக்கும் தனியே தரிசனம் தந்தருளினார்கள். கடந்த நாள் மாலை கல்யாண வயதில் வந்திருந்த ஆண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சுயம்வரகலா பார்வதி ஸ்லோக படனத்தினை வெள்ளிக்கிழமை பூஜையின் போது பாராயணம் செய்வித்து அருளாசி வழங்கினார்கள்.*

***ஜுன் 2*** *- பெங்களூர் முகாமில் காலை ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜைக்கு செல்லும் முன்பாக பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருளினார்கள். சுயம்வரகலா பார்வதி ஹோமமும் ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.*

***ஜுன் 8*** *- ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் பெங்களூர் முகாமிலிருந்து புறப்பட்டு அனந்தபூர் வந்து சேர்ந்தார்கள். மழை பெய்த நிலையிலும் ஸ்ரீஸ்ரீ சுவாமிகளுக்கு பக்தர்கள் பாத பூஜை செய்தார்கள்.*

***ஜுன் 9*** *- அனந்தபுரில் புறப்பட்டு இரவு கர்னூல் வந்தடைந்தார்கள். காலை 5.30 மணிக்கு கர்னூலை விட்டு புறப்பட்டு கர்னூல் வாழ் மக்களால் நிர்வகிக்கப்படும் கோசாலை ஒன்றுக்கு எழுந்தருளினார்கள். பின்னர் சங்கரமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜையை நடத்தி அருளினார்கள். மாலை வெள்ளிக்கிழமை பூஜையும் நடந்தேறியது.*

***ஜுன் 10 -*** *முற்பகலில் பூஜை முடித்து பக்தர்களுக்கு இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள். பின்னர் பக்தர்களிடையே உரையாற்றி ஹைதராபாத் அருகில் துண்டிகல் என்னுமிடத்திற்கு புறப்பட்டார்கள். இரவு 10.30 மணிக்கு ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜைக்காக புதிதாக கட்டப்பட்டுள்ள சர்வஜன ஹித மண்டபத்தினை துவக்கி வைத்தார்கள். அது சமயம் ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் ஆசார்ய பரம்பரை குறித்தும், ஸ்ரீ மடத்தின் பூஜை குறித்தும் அருளுரை வழங்கினார்கள்.*

***ஜுன் 11 -*** *காலையில் ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் வர்கல் என்னுமிடத்திற்கு வருகை தந்து புதிதாக கட்டப்பட்டுள்ள சங்கரமடத்தினை துவங்கி வைத்தார்கள். ஸ்ரீஸ்ரீ சுவாமிகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. யயவரம் சந்திராசேகர சித்தாதி குழுவினரால் குறிப்பிட்ட மூன்று மாத காலத்திற்குள் சங்கரமடத்தை கட்டி முடிக்கப்பட்டமைக்காக புகழ்ந்துரைத்தார்கள்.*

***ஜுன் 12 -*** *ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் அன்றாட பூஜை முடிந்த பின்னர், 11.30 மணி அளவில் சரஸ்வதி கோவிலுக்கு சென்று அபிஷேகம் செய்வித்தார்கள். மாலை லக்ஷ்மி நரசிம்மா டிரஸ்ட் மூலம் வேத விற்பன்னர்களுக்கு நடந்த பரிசளிப்பு விழாவினை சிறப்பித்தார்கள். தொடர்ந்து மாலை பூஜை நடந்தேறியது.*

*ஒவ்வொரு மாவட்டத்திலும் சங்கரமடம் அமையப்பெற வேண்டும் என்கிற ஸ்ரீஸ்ரீ சுவாமிகளின் வழிகாட்டுதலின்படி வர்கல் பக்தர்களால் அழகியதொரு சங்கரமடம் ஸ்ரீஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜைக்காக குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதுசமயம் ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் அவர்தம் அனுக்ரஹ பாஷணத்தில் பணி குறித்த முயற்சிக்கு பாராட்டு தெரிவித்தார்கள்.*

***ஜுன் 13 -*** *காலை ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீ ஹரிஷ்ராவ் மற்றும் தெலுங்கானா அமைச்சர் பெருமக்கள் ஸ்ரீஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்தார்கள். மூன்று கால பூஜை முடித்த பின்னர், சண்டிஹோமத்தில் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்கள். மாலை நிஜாமாபாத்திற்கு புறப்பட்டார்கள். வழியெங்கும் குழுமியிருந்த பக்தர்களுக்கு அருளாசி வழங்கிய வண்ணம் இரவு 8.00 மணிக்கு நிஜாமாபாத் வந்து சேர்ந்தார்கள். ராம மந்திரத்தில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு பின்னர் ஸ்ரீ மடம் முகாம் அமையப்பெறவுள்ள ஸ்ரீ கன்யகா பரமேஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்து அனுக்ரஹ பாஷணம் அருளிச் செய்தார்கள்.*

***ஜுன் 14 -*** *மூன்று கால பூஜை முடிந்த பின்னர் ஸ்ரீ மடம் முகாம் வர்கலிலிருந்து புறப்பட்டது. ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் காமாரெட்டி என்னுமிடத்தில் நீண்ட நேரம் தங்கி அங்கு*

*கூடியிருந்த பக்தர்களுக்கு தரிசனம் தந்து அனுக்ரஹபாஷணம் செய்தருளினார்கள். காலம் கடந்து இரவு நேரமாகினும் ஸ்ரீ கன்யகா பரமேஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்து அங்கு குழுமியிருந்த பக்தர்களுக்கு அருளாசி வழங்கி அனுக்ரஹபாஷணமும் வழங்கினார்கள். தொடர்ந்து நான்கு நாட்கள் முகாம் இவ்விடத்தில் நடைபெறுகிறது.*

***ஜுன் 15*** *- இன்று அல்ப துவாதசியானதால் இரண்டு கால பூஜைகள் காலை 8.30 மணிக்குள் முடித்து பக்தர்களுக்கு ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் தீர்த்த பிரசாதம் தந்தருளினார்கள். வருகை தந்த பிராம்மண சங்கத்தினரிடையேயும் உரையாற்றினார்கள். மாலை பிரதோஷ பூஜை நடந்தேறியது. அது சமயம் வருகை தந்த வைச்ய சங்கத்தினரிடையேவும் உரையாற்றினார்கள்.*

***ஜுன் 16*** *- காலை இரண்டு கால பூஜை முடித்து பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். மாலை வெள்ளிக்கிழமை பூஜை நடந்தேறியது.*

***ஜுன் 17*** *- நிர்மல் என்னுமிடத்தில் ஒரு நாள் முகாம் நிகழ்வதால் மூன்று கால பூஜை முடித்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதமும், பிரசாதமும் வழங்கிய பின்னர் நிஜாமாபாதிலிருந்து மாலை புறப்பட்டு நிர்மல் என்னுமிடத்திற்கு புறப்பட்டார்கள். நிர்மலில் மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு அன்றிரவே அடிலாபாத் வந்து சேர்ந்தார்கள்.*

***ஜுன் 18*** *- அடிலாபாத் வருகை தந்த பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளை பக்தி சிரத்தையுடனும் உற்சாகத்துடனும் பக்தர்கள் வரவேற்புடன் ஸ்ரீ ராம் மந்திர் திருப்பள்ளி வந்து சேர்ந்தார்கள். தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதமும், அனுக்ரஹபாஷணமும் செய்தருளினார்கள்.*

***ஜுன் 19*** *- ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் இரண்டு கால பூஜை முடிந்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். தொடர்ந்து மாலை ஸ்ரீ ராம சந்திர கோபால கிருஷ்ண மடத்திற்கு வருகை தந்து பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள். பின்னர் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் முகாமிற்கு திரும்பி தீப பூஜை செய்த பக்தர்கள், புரோஹிதர்கள் மற்றும் வைதீகர்களுக்கும் அருளாசி வழங்கினார்கள்.*

***ஜுன் 20*** *- பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் மூன்று கால பூஜை முடிந்து, சண்டி ஹோம பூர்ணாஹுதியிலும் கலந்து கொண்டு அனுக்ரஹித்த பின்னர் முகாம் நாக்பூருக்கு புறப்பட்டது. முகாம் நாக்பூரில் பகவத் பாத சபா என்னுமிடத்தில் ஜுன் 22 வரை நடைபெறுகிறது.*



# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்

ராகம் பஹாடீ

**ராகம் அஸாவேரி**

**ப்யாரே தர்சன் தீஜோ ஆய் தும் பின் ரஹ்யோ ந ஜாய் என்று தொடங்கும்பாடல்**

**பிரியமான கிரிதரனே என் முன் வா தரிசனம் தா. நீயின்றி நான் ஏது?**
**உன்னைக் காணாமல் நீரின்றி வாடும் தாமரையன்றோ !**
**நிலவு இல்லா ககனம் அன்றோ! எங்கும் அந்தகாரம்.**
**படபடப்புடன் இரவு கழியும் நீயின்றி**
**விரகதாபம் என்னைத் தின்கிறது.**
**புசிக்கப் பசியில்லை, உறங்க உறக்கமில்லை.சொல்ல வாயுமில்லை.**
**எங்கு செல்வேன்? என்ன சொல்வேன். பரிதவிக்கிறேன் கிரிதரனே1**
**ஹே ! அந்தர்யாமி ஏன் என்னை சோதிக்கிறாய்.**
**பரமாத்மாவே எனக்குத் தயை செய். என்னைச் சந்திக்க வா.**
**ஏழ் ஏழ் ஜன்மத்திற்கும் உன் தாஸி மீரா உன் காலடியில்.**
**பார்! பரந்தாம!**

**ராகம் பீலு 'கருணா ஸுனோ ஸ்யாம் மேரீ' என்னும் பாடல்**

*கண்ணா கருமை நிறக் கண்ணா ! என் தீனக்குரலைக் கேள். நான் உன் தாஸியல்லவா. உன்னைத் தேடித் தேடி பைத்தியமானேன். விரகதாபம் விஷமாய் என்னுடலில் உனக்காக உனக்காக நான் யோகியாய் மாறுவேன். மூலை முடுக்கெல்லாம் உன்னைத் தேடுவேன். பஸ்மம் உடலெங்கும் பூசி மான் தோலை உடலில் சுற்றி உன்னைத் தேடுவேன். எப்படியாயினும் இந்த உடல் ஒரு நாள் பஸ்மமாகும் அன்றோ! கானகமெங்கும் தேடினேன். ஊரெங்கும் தேடினேன் அழுது புரண்டேன். பரந்தாமனைக் காணேன்.*

*அவன் என் முன் வரும்போது துக்கமனைத்தும் அழியும். உடலின் ஒவ்வோர் அணுவும் அமைதியுறும், மனம் சாந்தி அடையும். ஹே! கிரிதர் மீரா உன் தாஸி உன் காலடியில்.*

# ராஜதரங்கிணி 5

பி. ஆர். கண்ணன்

**ராஜா ராவணர்**

**பிந்துரேகாசவிர்யஸ்ய த்ருஷ்டா பாவ்யர்தஶம்ஸிநீ ।**

**ஸ ராவணஸ்ய பூஜார்தம் லிங்கம் பாதி வடேஶ்வர: ।। 194 ।।**

கல்ஹணர் சொல்கிறார்: ராவணர் உபாஸித்த **வடேஶ்வர சிவலிங்கம்** இன்றும் ப்ரகாசிக்கிறது; அதிலுள்ள புள்ளிகளும், கோடுகளும் வருங்கால நிகழ்வுகளைத் தெரியப்படுத்துகின்றன என்று. அந்த ராஜா காஷ்மீர் ராஜ்யம் முழுவதையும் வடேஶ்வரருக்கு அர்ப்பணித்திருந்தார்.

**ராஜா நரர் - I (அ) கின்னரர்**

இந்த ராஜாவின் ராஜ்யத்தில் காஷ்மீரில் மிகுந்த ஸுபீக்ஷம் நிலவியது. அங்காடிகளும், சாலைகளும், படகுகள் நிறைந்த கால்வாய்களும், பழங்களும், மலர்களும் மண்டிய உத்யானவனங்களும், குபேரனுடைய தலைநகரை மிஞ்சும் வண்ணம், விதஸ்தா நதிக்கரையில் ஒரு பெருநகரை நிறுவினார் ராஜா. ஜனங்களின் ஆடை ஆபரணங்கள் அவர்களின் செல்வத்தைப் பறைசாற்றின.

ஆங்காங்கு நீதிகளைப் போதிக்கும் கல்ஹணர் சொல்வது: விவேகம் உள்ளவர்கள் தங்கள் சுக துக்கங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல், சிதையில் அக்னி அவர்கள் சரீரங்களை ஏற்றுக்கொள்ளும் வரை, தாங்களே ஜீரணித்துக்கொள்வார்கள்.

ஒருசமயம் நரர் ஒரு ப்ராம்மண பெண்மணியிடம் தவறாக நடந்து, அதனால் சினமுற்ற நாகர்கள் ராஜா ஸ்தாபித்திருந்த கின்னரபுரம் என்கிற அழகிய நகரத்தை அழித்தனர். ராஜாவும் தீயில் மாண்டார். அப்போது நிகழ்ந்த பேரழிவை வர்ணிக்கையில், கல்ஹணர் சொல்வது:

**மதுகைடபயோர்மேத: ப்ராகூர்வோரிவ சக்ரிணம் ।**

**தக்தாநாம் ப்ராணிநாம் தத்தத்ததா ஸர்வாங்கமஸ்ப்ருஶத் ।। 262 ।।**

'மது கைடப வதத்தின்போது, அவர்களின் கொழுப்பு, விஷ்ணுவின் தொடையளவே வந்தது; ஆனால் இப்போது இறந்தவர்களின் கொழுப்பு விஷ்ணுவின் மூர்த்தத்தில் முழுவதும் பரவியது' என்று. நாக அரசனின் ஸஹோதரி மலைமீதினின்று பெரிய பாறைகளை உருட்டிவிட்டு பல ஊர்களை அழித்தாள்.

காஷ்மீரில் உட்பகையினாலும், வெளிப்படையெடுப்பினாலும் பல தடவை அழிவு ஏற்பட்டு, புதுப்பிக்கவும்பட்டது என்பதை ராஜதரங்கிணியில் உள்ள வர்ணனைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

**ராஜா ஸுஷ்ரவஸ்**

இந்த நாக ராஜா இறுதியில் சாந்தியை நிறுவினார்.

**துக்தாப்திதவலம் தேந ஸரோ தூரகிரௌ க்ருதம் ।**
**அமரேஶ்வரயாத்ராயாம் ஜநைரத்யாபி த்ருஶ்யதே ।। 267 ।।**

பாற்கடல்போல் ஒளிரும் ஒரு ஏரியை அமரநாத யாத்ரை வழியில் மலைமீது அவர் ஏற்படுத்தினார். அது இன்றும் உள்ளது என்று கல்ஹணர் சொல்லும் ஏரி தற்போது ஸேஷநாக ஏரி என்ற பெயரில் ப்ரஸித்தமாக விளங்குகிறது. ப்ருங்கீ? ஸம்ஹிதை என்ற காஷ்மீர ஸ்தல புராணத்திலும் அமரநாத மாஹாத்ம்யம் என்ற பகுதியில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஸந்தர்ப்பத்தில் கல்ஹணர் சில நீதிகளையும், வாழ்வியல் உண்மைகளையும் கூறுகையில் சொல்கிறார்:

**ஸதீதைவதவிப்ராணாமப்யேகஸ்ய ப்ரகோபத: ।**
**ஶ்ருதோ ஹி ப்ரதிவ்ருத்தாந்தம் த்ரைலோக்யஸ்யாபி விப்லவ : ।। 272 ।।**

‘பதிவ்ரதா ஸ்த்ரீ, தேவர்கள், கற்றறிந்த ப்ராம்மணர்கள் ஆகியோரில் ஏதேனும் ஒருவருடைய கோபத்தினால் மூவுலங்களுக்கும் பேராபத்து ஏற்படடுவதை பல சரித்திரங்களில் கேள்வியுறுகிறோம்‘ என்று.

**ராஜா ஸித்தர்**

நரரின் புத்ரர் ஸித்தர் ராஜாவாகி, தன் பிதா செய்த தவறுகளை செய்யாமல் நல்ல ராஜ்ய நிர்வாகம் செய்தார்.

**போகயோகேந மாலிந்யம் நேதும் மத்யகதோபி ஸ : ।**
**ந ஶக்யதே ஸ்ம பங்கேந ப்ரதிமேந்துரிவாமல : ।। 278 ।।**

‘இன்பங்களுக்கு மத்தியில் இருந்தும், அவை அவரை கெட்ட வழியில் இழுத்துச் செல்ல முடியவில்லை; சந்த்ரனின் பிம்பம் சேற்றினால் கெடாததுபோல்.‘ அறுபது ஆண்டுகள் ராஜ்யபரிபாலனம் செய்த ஸித்தர், தன் பணியாளருடன் தன் சரீரத்துடனேயே

சிவலோகம் அடைந்தார். தேவதைகள் ஏழு நாட்களுக்கு துந்துபி கோஷம் செய்தனர்.

வேறு சில ராஜாக்களுக்குப் பிறகு, மிஹிரகுலர் ராஜாவானார்.

**ராஜா மிஹிரகுலர்**

707 கி.மு.வில் ஆண்ட இந்த ராஜாவின் கொடுங்கோல் ஆட்சியில், ப்ரஜைகள் - பெண்மணிகள், குழந்தைகள் உள்பட - எல்லோரும் கொல்லப்பட்டு அவர்கள் சொத்தினை ராஜா அபகரித்தார். ஒரு சமயம் ஏதோவொரு அல்ப காரணத்திற்காக லங்கையின்மீது படையெடுத்த இந்த ராஜாவைக்கண்ட வழியிலிருந்த சோழ, கர்நாடக தேச ராஜாக்கள் பயத்தினால் ஓட்டமெடுத்தனர். வேறொரு சமயம் சந்த்ரகூல்யா என்ற கால்வாய் பெரும் பாறையொன்றினால் அடைபட்டபோது, ராஜா ஸ்வப்னத்தில் கண்டது, பாறை பதிவ்ரதா ஸ்த்ரீயினால் மட்டுமே அகற்றப்படமுடியும் என்று. ஸ்த்ரீகளால் பாறை நகர்த்தப்பட முடியாத காரணத்தினால், ராஜா அந்த ஸ்த்ரீகளை, குடும்ப ஸஹிதம் வீழ்த்தினார். ராஜாவின் அட்டூழியங்களுக்கு எல்லையில்லாமல் போயிற்று.

ஆனால் மிஹிரேச்வரர் கோவில் கட்டி, மிஹிரபுரம் என்ற நகரத்தையும் நிறுவி, ம்லேச்சர்களை விரட்டினார் ராஜா. தன் இறுதிக் காலத்தில் ராஜா வாட்கள் நிரம்பிய ஒரு மேடையில் சிதை மூட்டி, ப்ராணனை விட்டு ப்ராயச்சித்தம் செய்தார்.

**ராஜா கோபாதித்யர்**

இவருடைய ராஜ்யகாலத்தை கல்ஹணர் பொற்காலம் என்று வர்ணிக்கிறார். நடத்தை சரியில்லாத ப்ராம்மணர்களை நாடு கடத்தல் செய்தார்; அவர்கள் பூண்டு உண்பதே இதற்குப் போதுமான குற்றமாக இருந்தது. கோபாத்ரி குன்றுமீது (தற்போதுள்ள சங்கராசார்யார் குன்று) ஜ்யேஷ்டேச்வரர் ஆலயத்தை நிர்மாணித்தார்.

ஜலௌகர் நிறுவிய ஜ்யேஷ்டேச்வரர் ஆலயம் வேறு என்று தெரிகிறது. யக்ஞங்களைத் தவிர வேறு இடங்களில் பசுவதையை நிறுத்தினார். 60 வருஷ ஆட்சிக்குப்பின் ஸத்கதியடைந்தார்.

**ராஜா நரேந்த்ராதித்யர்**

கோபாதித்யரின் புத்ரரான இவர், பூதேச்வரர், பார்வதி ஆலயங்களை நிறுவினார். அவருடைய குருவான உக்ரர் உக்ரேச்வரர், மாத்ருசக்ரம் கோவில்களைக் கட்டினார்.

**ராஜா யுதிஷ்டிரர் - I**

இவர் நன்கு தொடங்கினாலும், மதிகெட்ட ஆலோசகர்களினால் தவறான நடவடிக்கைகளில் இறங்கினார். கல்ஹணர் வர்ணிக்கையில்:

**ஸர்வத்ர ஸமத்ருஷ்டித்வம் குணோயம் கலு யோகிந : ।**

**அகீர்திஹேது : ஸ மஹாந்தோஷஸ்து ப்ருதிவீபதே : ।। 355 ।।**


'யாண்டும் ஸமநோக்கு என்பது யோகிகளுக்கு குணமாகும்; ஆனால் நாடாளும் ராஜாவுக்கு பெரும் குற்றமாக ஆகி, கெட்ட பெயரை ஸம்பாதித்துக் கொடுக்கும்.'

அவருடைய மந்திரிகளே எதிரியுடன் சேர்ந்து அவரை வீழ்த்தவே, ராஜா எதிரி நாட்டில் அடைக்கலம் புகுந்தார். ஜனங்கள் கண்ணீர் வடித்தனர்.

(தொடரும்)

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 9

ஸ்ரீ கௌடபாதாசார்யர்

**ப்ரக்ஞாவைசாக2 வேதக்ஷபி 4தஜலநிதே4ர் வேத3நாம்நோSந்தரஸ்த2ம்**
**பூ4தாந்யாலோக்ய மக்3நாந்யவிரத ஜனன க்3ராஹு கோ4ரே ஸமுத்3ரே ।**
**காருண்யாதுத்தத4ராம்ருதமித3மமரைர் து3ர்லப4ம் பூ4 தஹேதோர்**
**யஸ்தம் பூஜ்யாபி4பூஜ்யம் பரமகு3ருமமும் பாத3பாதைர் நதோSஸ்மி ॥**



பூஜிக்கத் தக்கவர்களுக்குள் சிறப்பாக பூஜிக்கத் தக்கவரும், மிகப் பயங்கரமான முதலை போன்ற கொடிய ஜல ஜந்துக்கள் நிறைந்த, எல்லா உயிர்களும் திரும்பத் பிறப்பெடுத்தலை இயல்பாக உடையதுமான பிறவிப் பெருங்கடலில் விழுந்து நோவுப்படுவதைக் காண ஸஹிக்காமல், மிக மேலான கருணையினால், தேவர்களுக்குக் கூடக் கிடைக்காத மரணமிலாப் பெருவாழ்வை அருளும், வேதக் கடலின் ஆழத்தில் புதைந்து கிடந்த, அத்வைத வேதாந்த ஞானமெனும் அமுதத்தைத் தனது புத்தி சக்தியால் கடைந்து அளித்தவரும், எனது பரம குருவுமான ஸ்ரீ கௌடபாதாசார்யாரைப் பணிந்து நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீ கௌடபாதாசார்யாள் ஸ்ரீ சங்கர பகவத்பாதருக்கு பரமகுரு ஆவார். நமக்கு கிடைத்துள்ள முழுமையான அத்வைத வேதாந்த நூல்களுள் இவரது நூல்கள் தனிச் சிறப்புப் பெற்றவையாக இருக்கின்றன. இவரது மாண்டூக்ய உபநிஷத் காரிகைக்கு ஸ்ரீ சங்கர பகவத் பாதர் பாஷ்யம் அருளியுள்ளார். இந்த பாஷ்யத்திற்கு ஸ்ரீ ஆனந்தகிரி ஸ்வாமிகள் உரை எழுதியுள்ளார். இதில் ஸ்ரீ கௌடபாதாசாரியர் பத்ரிகாஸ்ரமத்தில் எப்போதும் ஸ்ரீமன் நாராயண த்யானத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். 17-ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீ பால கிருஷ்ணானந்த ஸரஸ்வதி ஸ்வாமி அவர்கள் தனது 'சாரீரக மீமாம்ஸா பாஷ்ய வார்த்திகத்தில் ஸ்ரீ கௌட பாதாச்சாரியார் குருக்ஷேத்திரத்திற்கு அருகில் உள்ள ஹீராவதி நதிக்கரை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடுகிறார். இவர் த்வாபரயுகத்தில் அவதரித்தவர் என்றும், பத்ரிகாஸ்ரமத்தில் ஸமாதியில் ஆழ்ந்திருந்தவர் என்றும் அறியப்படுகிறது. மாண்டூக்ய உபநிஷத் காரிகை தவிர உத்தர கீதை, ந்ருஸிம்ம உத்தரதாபினி உபநிஷத், துர்கா ஸப்தசதீ, ஸாங்க்ய காரிகைகள் போன்றவற்றிற்கு விளக்க உரை எழுதியுள்ளார். ஸ்ரீ வித்யாரண்ய சூத்ரம் மற்றும் ஸுபகோதயம் என்ற ஸ்ரீ வித்யா உபாஸனா தொடர்பான நூல் என்ற இரு தனி நூல்களையும் எழுதியுள்ளார்.

ஜீவ சைதன்யத்துடன் இவரது நூல்கள் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகாது. ஸ்ரீ சங்கரர் துவங்கி வந்த எல்லா ஆசார்யார்களிடமும் இவரது கருத்தின் தாக்கத்தைக் காணமுடியும். இவரது நூல்கள் 'வேதாந்த மூலம்' என்று கருதப்படுகிறது. மானவ ஸம்ப்ரதாய பரம்பரை இவரிடமிருந்தே துவங்குகிறது என்று சொல்லலாம். பத்ரிகாஸ்ரமத்தில் தவத்தில் இருந்த இவருக்கு உபநிஷத்துக்களின் தாத்பர்யம் அத்வைதமே என்று ஸ்ரீ பகவான் நாராயணன் வெளிப்படுத்தியதாகக் கருதப்படுகிறது.

இவர் மாண்டூக்ய உபநிஷத்துக்கு எழுதியுள்ள ச்லோக வடிவில் அமைந்த காரிகை அத்வைத வேதாந்தத்தின் ஸாரமாக உள்ளது. 'வேதாந்தார்த்த ஸார ஸங்க்ரஹபூதம். இந்நூல் நான்கு அத்யாயங்களில் 215 ச்லோகங்களைக் கொண்டுள்ளது. முதல் அத்யாயம் 'ஆகம ப்ரகரணம்' என்றும், இரண்டாவது அத்யாயம் 'வைதத்ய ப்ரகரணம்' என்றும் மூன்றாவது அத்யாயம் 'அத்வைத ப்ரகரணம்' என்றும், நான்காவது அத்யாயம் 'அலாதசாந்தி பிரகரணம்' என்றும் வழங்கப்படுகிறது. இவற்றில் முதல் ப்ரகரணம் விழிப்பு நிலை, கனவு நிலை, கனவற்ற உறக்கம் இவற்றைப் பற்றி எடுத்துக்கூறி இம்மூன்று நிலைகளிலும்

சாட்சியாகவும், மூன்றையும் கடந்து நிற்கும் ஆத்ம தத்துவத்தை நிரூபணம் செய்கிறது.

இரண்டாவது ப்ரகரணம் விழிப்பு நிலையில் காணப்படும் புற உலகின் இருப்பை பொய்யென நிரூபித்து இது ஒரு நீண்ட கனவே என்று முடிவு செய்கிறது. மூன்றாவது ப்ரகரணம் ஆத்ம தத்துவத்தின் இரண்டற்ற தன்மையை சாஸ்திர வசனங்களின் அடிப்படையில் நிரூபித்து எதனாலு தீண்டப்பட முடியாத, களங்கப் படுத்தப்பட முடியாத ஆத்மதத்துவத்தை **'அஸ்பர்ச யோக'த்தின்** மூலம் காட்டிக் கொடுக்கிறது. நான்காவதான அலாத சாந்தி ப்ரகரணம் உறுதியான வாதங்களின் மேல் சாஸ்திர வசனங்களுடனும் அனுபவத்தின் அடிப்படையிலும் புற உலகின் தோற்றம் பொய்யென்பதையும் இதற்கு ஆதாரமான ஆத்ம தத்துவமே மெய்யென்பதையும் நிரூபிக்கிறது.

எல்லா நதிகளும் கடைசியில் கடலைத்தான் அடைந்தாக வேண்டும். அது போல் த்வைதத்தின் அடிப்படையில் எழுந்துள்ள எல்லா சிந்தனைகளும் இரண்டற்ற அத்வைதத்திலேயே முடிந்தாக வேண்டுமென்பது இவரது கருத்து. எல்லா மத பேதங்களையும் ஸம்ப்ரதாய பேதங்களையும் தழுவி நிற்பது, ஒருங்கிணைப்பது அத்வைதமும் என்பதை இவர் உறுதிபடக் கூறியுள்ளார்.

கௌடதேசம் என்பது காஷ்மீர் தேசத்தின் ஒரு பகுதியைக் குறிக்கும். இப்பிரதேசத்தைச் சேர்ந்த 'ஸாரஸ்வதி பிராம்மணர்'களின் வம்சத்தில் வந்தவர் கௌடபாதர் என அறியப்படுகிறது. பஞ்ச கௌடர்களில் இவர்கள் ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றனர்.

ஒரு சமயம் ப்ரதோஷ காலம் ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷன் மேல் தியானத்தில் அமர்ந்திருந்தார் பகவான் நாராயணன். நேரம் ஆக ஆக ஆதிசேஷனால் பரமனைத் தாங்க முடியவில்லை. அதிசயித்தவராக மூச்சிரைக்க பகவானைக் காரணம் கேட்டார். ப்ரதோஷ காலமில்லையா! ஆகையால் சிதம்பரேசனை ஹ்ருதயத்தில் தியானம் செய்தேன். ஆனந்த மிகுதியில் அவர் ஆடிய நடனத்தில் லயித்துப் போனேன். பரமேச்வரன் நெஞ்சில் நிலையாகக் குடிகொண்டான். பூரித்துப் போனேன். இந்த பூரிப்பினால் என்னை உன்னால் தாங்க முடியவில்லை போலும் என்றார் பரமன்.

இதைக் கேட்டதும் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனுக்குத் தானும் பரமேச்வரனைத் தியானிக்க வேண்டும் அவரது தாண்டவத்தைக் காண வேண்டும் என்ற அவா பிறந்தது. பரமனிடம் வேண்டினார். பரமனும் அருளினார்.

ஒரு சமயம் அனுஸூயா தேவி கோணிகா

நதிக்கரையில் அனுஷ்டானம் செய்து கொண்டிருந்தாள். இரு கைகளிலும் நீர் எடுத்து அர்க்யம் விடும்போது அவள் கரங்களில் ஆதிசேஷன் சிறிய பாம்புக் குட்டியாக விழுந்தார். அவள் பயந்து நீரைக் கீழே விட, இவர் அவள் பாதங்களில் சலித்து விழுந்தார். பாதங்களில் சலித்து விழுந்து குழந்தையானார். பாதங்களில் சலித்து விழுந்ததால் இவர் பதஞ்ஜலி என்றழைக்கப்பட்டார். சிதம்பரம் சென்று வ்யாக்ரபாதரெனும் முனிவருடன் இருந்து நடராஜ தர்சனம் பெற்றார்.

பாணினியின் வ்யாகரண ஸூத்ரங்களுக்கு இவர் எழுதிய உரை ‘மஹா பாஷ்யம் என வழங்கப்படுகிறது. சிதம்பரத்தில் ஆயிரங்கால் மண்டபத்தில் பதஞ்சலி முனிவர் பாடம் நடத்தினார். ஆயிரம் மாணவர்கள் பாடம் கேட்டனர். திரை மறைவிலிருந்து கொண்டு தனது ஆயிரம் முகங்களாலும் ஆயிரம் பேருக்கும் தனித்தனியே பாடம் நடத்தினார். பாடம் கேட்பவர்களுக்குப் பாட சமயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு நிபந்தனைகள் விதித்திருந்தார். முதலாவது நிபந்தனை பாடம் நடக்கும் காலத்தில் யாரும் திரையை விலக்கிப் பார்க்க யாரும் முயற்சிக்கக் கூடாது. பாடம் நடக்கும்போது யாரும் எழுந்து வெளியில் செல்லக்கூடாது என்பது இரண்டாவது நிபந்தனை. இரண்டாவது நிபந்தனையை மீறுவோர் ப்ரும்மராக்ஷஸனாகி விடுவார்கள். இவ்வாறு பல நாட்கள் பாடம் நடந்து வந்தது.

ஒரு நாள் கௌட தேசத்திலிருந்து வந்திருந்த ஒரு மாணவன் நிபந்தனையை மீறி விளையாட்டுத் தனமாக வெளியே சென்று விட்டான். இந்தச் சமயத்தில் மற்றொரு மாணவன் ஆசிரியர் எப்படித் திரை மறைவிலிருந்து கொண்டு ஆயிரம் பேருக்கும் தனித்தனியே பாடம் சொல்கிறார் என்று காண ஆசைப்பட்டுத் திரையை விலக்கினான். தன் சொந்த சொரூபத்தில் ஆயிரம் தலைகளுடன் இருந்த ஆதிசேஷனின் முகஜ்வாலையில் எல்லா மாணவர்களும் சாம்பலாகி விட்டனர். தன் முயற்சியெல்லாம் வீணாகி விட்டதே என்று வருத்தத்துடன் முனி வடிவத்தில் தனியே அமர்ந்து வருந்திக் கொண்டிருந்தார் பதஞ்ஜலி மஹரிஷி.

இச்சமயத்தில் பயந்து நடுங்கிக் கொண்டே அமைதியாயிருந்த மண்டபத்தினுள் மெதுவே நுழைந்தான் கௌட தேசத்து இளைஞன். எவரையும் காணவில்லை. சாம்பற் குவியலைக் கண்டு திடுக்கிட்டான். சுற்றிச்சுற்றிப் பார்த்தான். மூலையில் வருத்தத்துடன் அமர்ந்திருந்த குருநாதரைக் கண்டான். அவர் தாள் பணிந்து தான் செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டினான். ஒரு மாணவனாவது எஞ்சினானே என்று மிகவும் மகிழ்ந்தார் பதஞ்ஜலி மஹரிஷி.

தனது நிபந்தனையை மீறியதால் இவன் ப்ரும்மராக்ஷஸனாகி விடுவானே என்று வருந்தினார். பிறகு யோசித்து 'நான் இதுவரையில் சொல்லியது சொல்லாதது எல்லாமே உனக்குத் தெரிய வரும். நீ பூரண ஞானம் பெற்றவனாக ஆவாய்' என - அனுக்ரஹித்தார். ஆனால் சாபம் இருக்கிறதே! அது நீங்கவும் வழி காண்பித்துக் கொடுத்தார். 'இலக்கணம் தொடர்பாக நான் கேட்கும் சில கேள்விகளை பாடம் கற்க வரும் மாணவனிடம் நீ கேள். சரியான விடை சொல்வபவனுக்கு என்னிடம் கற்ற வ்யாகரண சாஸ்திரத்தை முழுமையாகக் கற்றுக் கொடு. இதனால் சாபத்தால் வரும் ப்ரும்மராக்ஷஸத் தன்மையும் உன்னை விட்டு நீங்கி விடும்' என்றார்.

கௌட தேசத்து இளைஞன் ப்ரும்மராக்ஷஸராக மாறி காலக்ரமத்தில் நர்மதா நதி தீரத்தை அடைந்தார். பழமையான அரசமரத்தை தனக்கு இருப்பிடமாகக் கொண்டார். வட தேசத்திலிருந்து தென் நாட்டிற்கும், தென் நாட்டிலிருந்து வடநாட்டிற்கும் கல்வி கற்கச் செல்வோர் கடந்து வரும் மையமான இடமாக இருந்ததால் இவ்விடத்தை இருப்பிடமாக்கிக் கொண்டார். கடந்து செல்வோர் அனைவரிடமும் இலக்கணம் பற்றிக் கேள்வி கேட்டு சரியாகச் சொல்லவில்லையெனில் அவரை கொன்று தின்று விடுவார். இப்படி இருக்கும் போது ஒருநாள் இவரிடம் மாட்டிக்கொண்டு இவர் கேள்விகளுக்கு சரியான விடைகூறி அவர் அருளைப் பெற்றான் ஒரு இளைஞன். இவரே பிற்காலத்தில் கோவிந்த பகவத்பாதர் ஆனார். ஸ்ரீ சங்கரருக்கும் குருவாக ஆனார்.

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை ॥ ௯ ॥**

*பொறிவாயில்களில் (இந்த்ரிய கோளகங்களில் ஆற்றல் இல்லையென்றால் (கோளகங்கள் பயனற்றது போல) எட்டு குணங்களை சிறப்பாக உடைய இறைவனுடைய) திருவடிகளை (பணிந்து வணங்காத தலை (முதலான உடல் உறுப்புகள்) இருந்தும் பயன் இல்லாதது.*

# சாணக்ய ஸுபாஷிதம்

**தனமே பந்து**

**யஸ்யார்தஸ்ய மித்ராணி யஸ்யார்த்தஸ்ய பாந்தவா: ।**

**யஸ்யார்த: ஸ புமான் லோகே யஸ்யார்த்த: ஸ ஹி பண்டித: ॥**

*எவனுக்கு தனம் உள்ளதோ அங்கு நண்பர்கள், அவனுக்கு பந்துக்கள், அவனே மனுஷன், அவனே பண்டிதன்.*

**தன விதரணம்**

**உபார்ஜிதானாம் வித்தானாம் த்யாக ஏவ ஹி ரக்ஷணம்**

**தடாகோதர ஸம்ஸ்தானாம் பரீவாஹ இவ அம்பஸாம் ॥**

*சேர்த்த செல்வம் தானத்தால் ரக்ஷிக்கப்படும். நீர் நிரம்பிய தடாகம் நீரை மதகின் வழி வெளிவிடுவது போல்.*

**ஸ்வல்ப தானம்**

**ஆர்தேஷு விப்ரேஷு தயன்விதம் ச**

**யச்ஸ்ரத்தயா ஸ்வல்பமுபைதி தானம்**

**அனந்தபாரம் ஸமுபைதி ராஜன்**

**யத்தீயதே தன் ந லபேத் த்விஜேப்ய: ॥**

*அரசனே ! கஷ்டத்தில் உள்ள விப்ரனுக்கு ஸ்ரத்தயாக தரப்படும் தானம் அளவில் சிறியதாயினும். மிகப் பெரியது. அனந்தமாய் பலனளிக்கும் தன்மை கொண்டது.*

**பல்கிப்பெருகும்**

**வித்தம் தேஹி குணான்விதேஷு மதிமன் நான்யத்ர தேஹி க்வசித்**

**ப்ராப்தம் வாரினிதேர்ஜலம் கனமுகே மாதுர்யயுக்தம் ஸதா**

**ஜீவான் ஸ்தாவர ஜங்கமாச்ச ஸகலான் ஸஞ்சீவ்ய பூமண்டலம்**

**பூய: பஸ்ய ததேவ கோடிகுணிதம் கச்சத் தமம்போனிதிம் ॥**

*குணம் உடையவர்களுக்கு தானம் செய்க. மற்றவர்களுக்கு வேண்டாம். கடல் நீர் மேகமாய் மாறி மாதுர்யமான நீராகி மழையாய் ஸ்தாவர ஜங்கமங்கள் அனைத்துக்கும் ஆதாரமாகி பல்கிப் பெருகி வாழவைத்து பல்கிப் பெருகி அந்த கடலையே அடைகிறது பார் !*

**தன நஷ்டம்**

**தேயம் போஜ்யதனம் ஸதா ஸுக்ருதிபி: நோ ஸஞ்சயஸ்தஸ்ய**
**ஸ்ரீகர்ணஸ்ய பலேச்ச விக்ரமபதேரத்யாபி கீர்த்தி : ஸ்திதா**
**அஸ்மாகம் மது தானபோக ரஹிதம் நஷ்டம் சிராத் ஸஞ்சிதம்**
**நிர்வாணாதிதி நைஜபாதயுகளம் கர்பத்யஹோ மக்ஷிகா ॥**

*நல்லவர்களுக்கு தானம் செய்யப்பட வேண்டும். தனம் சேர்த்து வைக்க அல்ல. கர்ணன், பலி, விக்ரமாதித்யன் இவர்கள் கீர்த்தி இன்றும் பாடப்படுகிறது. கொடுப்பதும் அல்லாமல் அனுபவிக்கவும் இல்லாமல் தேனியால் சேர்த்த மது(தேன்) கெட்டு நஷ்டமும் ஆனது கண்டு தன் இறக்கைகளை அசைத்து அந்தோ! என்று அலரும் தேனீ போல் நம் தனம் கெட வேண்டாம்.*

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431
**IFSC Code :** ICIC 0006026
**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs
**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005
**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616
**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# தர்ம சாஸ்த்ரம் பூஜை சில விளக்கங்கள்

1. குளிக்காமல் எந்த வைதிக கார்யங்களையும் செய்யக்கூடாது

2. மணி அடிக்கமல் பூஜையை ஆரம்பிக்கக்கூடாது

3. ஒரு வஸ்த்ரத்துடனோ ஈரத்துணியுடனோ பூஜை, ஜபம் முதலிய கார்யங்களை செய்யக்கூடாது

4. ஸந்த்யா காலங்களில் எதையெளம் சாப்பிடக்கூடாது

5. பவித்ரத்தை கைய்யில் அணிந்துகொண்டு எதுவும் உண்ணக்கூடாது.

6. உண்ணும்போது கோவிந்த கோவிந்த என்று சொல்லிச்சாப்பிடவேண்டும்

9. வாயினால் ஊதி தீபத்தை அணைக்ககூடாது.

10. ஹோமாக்னியில் கண்டகுப்பைகளைப்போடக்கூடாது ஹோமம் முடிந்தபின் குண்டத்தை மூடக்கூடாது.

11. சமையல் அடுப்பினருகில் செருப்புப்போட்டுக்கொண்டுச் செல்லக்கூடாது.

12. மாதவிலக்கான ஸ்த்ரீ நெருப்பு மூட்டக்கூடாது, சமையல் செய்யக்கூடாது.

13. ஒரே வருடத்தில் இரண்டு ஸுமங்கலிப்ரார்தனை செய்யக்கூடாது.

14. வீட்டிற்கு வரும் ஸுமங்கலிகளுக்கு கும்குமம் கொடுக்காமல் அனுப்பக்கூடாது.

15. வேறு நபர் பயன்படுத்திய மாலை வஸ்த்ரம் பாதரக்ஷை இவைகளை பயன்படுத்தக்கூடாது.

16. கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்காரக்கூடாது

17. துறவிகளுக்கு நம்ஸ்காரம் செய்தபின் அபிவாதனம் சொல்லக்கூடாது

18. கோலம்போடும்போது இரண்டு இழையால் போடவேண்டும்

19. அன்று அன்று மடியாக ஜலம் எடுத்து வந்து அபிஷேகத்தை செய்யவேண்டும்.

20. பூஜை பொருட்களையோ தைவப்ரஸாதங்களையோ சாப்பாட்டு மேஜைமீது வைக்கக்கூடாது.

21. ஆலயதர்சனம் முடிந்தவுடன் த்வஜஸ்தம்பத்தின் அருகில்தான் நமஸ்கரிக்கவேண்டும்.

22 ஆஸனம் இல்லாமல் எந்த ஒரு ஜபத்தையொ பூஜையையோ செய்யக்கூடாது.

23. பூஜக்கு என்று தனிப்பாத்ரங்களை பயன்படுத்தவும். எச்சில் பாத்ரங்களை பயன் படுத்த்க்கூடாது.

23. நவராத்ரிபூஜையை இரவு 9 மணீக்குமேல் ஆரம்பித்துச்செய்யக்கூடாது.

24. வேதமன்த்ரங்களை புஸ்தகம்பார்த்து சொல்லக்கூடாது.

25. காயத்ரீ மந்த்ரத்தை ராகம் போட்டுப் பாடுவதோ, ரிங்டோனாகப் பயன்படுத்தக் கூடாது.

26. வீட்டு வாசல் படியில் தலை வைத்துப்படுக்கக்கூடாது

27. பூணூலில் சாவிகளை மாட்டிவைக்ககூடாது

28. பூஜை செய்யும்போது ருத்ராக்ஷமாலை அல்லது ஜபமாலை அணிந்து செய்வது உத்தமம்.

28. பெண்கள் அங்கப்ப்ரதிக்ஷணம் செய்யக்கூடாது

29. திருமண மண்டபங்களில் மேடைமீது செருப்புடன் ஏறக்கூடாது.

30. குடிக்கத்தண்ணீர் கேட்பவர்களுக்கு தண்ணீர்தராமல் இருக்கக்கூடாது.

31. பிறந்த நாளை ஆங்கில தேதியில் கொண்டாடக்கூடாது. தமிழ் நட்சத்திரத்தில்தான் கொண்டாடவேண்டும்.

32. தலை முடியை கட்டிகோள்ளாமல் பெண்கள் எந்த கார்யத்தையும் செய்யக் கூடாது.

33. தர்மசிந்தனையுடன் யார்க்கும் தம்மால் ஆகும் உதவியைச் செய்யவேண்டும்.

33. காசி கயா போன்ற இடங்களில் வைதிக கர்மா செய்பவர்கள் அங்கு உள்ள புரோகிதர்களையே வாத்யாரகக்கொள்ளவேண்டும்.

34. நவராத்ரியில் கொலு வைத்துவிட்டு வெளியூர் ப்ரயாணம் செய்யக்கூடாது.

35. நாமஜபம் செய்பவர்கள் ஸந்த்யாவந்தனம் தர்ப்பணம் போன்ற கர்மானுஷ்டானன்களை செய்யாமல் இருக்கக்கூடாது.

36. பூஜைக்கான புஷ்பங்களை , பழங்களை எச்சில் தட்டில் வைக்ககூடாது.

37. ஆலயத்தில் எந்த ஒரு தனிமனிதரையும் வணங்கக்கூடாது.

38. புண்ய நதிகளில் ஸ்னானம் செய்பவர்கள் நதி நீரை ப்ரோக்ஷணம் செய்துகொண்டு பின்பு நீரில் இறங்கவேண்டும்.

39 எழுத்துக்கள் உள்ள மிதியடிகளை பயன்படுத்தக்கூடாது.( எழுத்துக்கள் ஸரஸ்வதி ஸ்வரூபம்)

40 ஆத்மகுணங்களான தயை க்ஷாந்தி,அனஸூயா,ஸௌசம், அனாயசம், மங்களம், அகார்ப்பண்யம் அஸ்ப்ருஹா. இவைகளை எப்போதும் கடைபிடிக்க வேண்டும்

தர்மஸாஸ்த்ரத்தில் ஆன்னிககாண்ட சுருக்கம் முற்றியது

# ஆனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 22-07-2023 | சனி | ஆடி பூரம் |
| 26-07-2023 | புதன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 28-07-2023 | வெள்ளி | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 29-07-2023 | சனி | ஏகாதசி |
| 30-07-2023 | ஞாயிறு | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர் |
| 31-07-2023 | திங்கள் | உத்ராடம் தேர் |
| 01-08-2023 | செவ்வாய் | உத்ராடம் வேத பாராயணம் ; பௌர்ணமி பூஜை |
| 02-08-2023 | புதன் | அவிட்டம் தேர் |
| 03-08-2023 | வியாழன் | ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஜயந்தி ஆடிப் பெருக்கு ; அவிட்டம் வேதபாராயணம் |
| 12-08-2023 | சனி | ஏகாதசி |
| 13-08-2023 | ஞாயிறு | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 21-07-2023; 28-07-2023 04-08-2023; 11-08-2023 வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# ஒன்பதாந் திருமுறை பதினோராந் திருமுறைகளும் அத்வைத சித்தாந்தமும்

## (நக்கீரர், பட்டினத்தார் முதலியவர்களின் ஞானநெறி)

*(வே. நாராயணன், சென்னை)*

*சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாந் திருமுறையும் பதினோராந் திருமுறையும் பல அடியார்களின் பாடல்களைக் கொண்டு தொகுக்கப்பட்டவை; இவர்களுட் சிலர் தேவாரம் பாடிய மூவருக்கும் முந்தியவர்; சிலர் பிற்காலத்தவர். இவர்கள் பாடிய பாடல்களிலே சிவபெருமானே யன்றி சிவ குமாரர்களாகிய விநாயகரும் ஷண்முகரும் ஆளுடையரசாகிய அப்பரும் ஆளுடைய பிள்ளையாராகிய சம்பந்தரும் துதிக்கப் பெற்றுள்ளனர். இவை பெரும்பாலனவும் துதிரூபமாய் அமைந்து தத்துவத்தைப் போதிக்க வேண்டுமென்ற எண்ணமின்றி எழுந்தன வாதலால், இவற்றுள் தத்துவ விளக்கத்தைக் காண்பது அரிது. ஆயினும், அனுபவம் நிறைந்த இவர்களது சொற்கள் ஆங்காங்கு அத்வைத சித்தாந்தத்தை மெய்ப்பிக்கின்ற வையாய் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

*திருமாளிகைத்தேவர், 'இணங்கிலா ஈசன்' என்று தொடங்கும் திருவிசைப்பாவிலே பேதவாதப் பிசுக்கரைக் காணாகண் ; வாய் பேசாதப் பேய்களோடே' என்று சமணரைப் பழிக்கும் போது, அபேத வாதமே தம் மதம் என்பதை விளக்குகிறார். கருவூர்த் தேவரும் கங்கைகொண்ட சோளேச்சுரத்தானைப் பாடும் போது,*

***சுருதிவா னவனாம் திருநெடு மாலாம் சுந்தர விசும்பின் இந்திரனாம்***
***பருதிவா னவனாம் படர்சடை முக்கட் பகவனாம் அகவுயிர்க் கமுதாம்***

***எருதுவா கனனாம் எயில்கள் மூன்றெரித்த ஏறுசே வகனுமாம் பின்னும்***
***கருதுவார் கருதும் உருவமாம் கங்கை கொண்ட சோளேச் சுரத்தானே***

*என்று அத்வைத சித்தாந்தத்திலுள்ள ஒன்றெனும் உண்மைக்குச் சான்று பகர்கிறார்.*

*நக்கீர தேவநாயனாரும் அத்வைதத்தையே அனுபவ வாயிலாக உணர்ந்தவராம். கைலை பாதி, காளத்தி பாதி யந்தாதி'யிலே (5.5)*

யானென்றுத் தானென் றிரண்டில்லை யென்பதனை
யானென்றுங் கொண்டிருப்பானானாலும்-தேனுண்
டளிகடாம் பாடு மகன்கயிலை மேயான்
றெளி கொடான் மாயங்கள் செய்து

என்று அவனுடைய மாயத்தால் தனக்கு அத்வைதநிலை தெளியா திருப்பதைக் குறிப்பிடுகிறார்.

சிவனே முதற்காரணம் என்னும் அத்வைதவுண்மையை அறிந்தவர் சிவலோகம் பெறுவர் என்பதை சேரமான்பெருமா ணாயனார் தமது 'பொன்வண்ணத் தந்தாதி' யிலே பின்வருமாறு விளக்குகிறார்:

தவனே யுலகுக்குத் தானே முதறான் படைத்த வெல்லாஞ்
சிவனே முழுது மென்பார் சிவலோகம் பெறுவர் (5)

பட்டணத்துப் பிள்ளையார் பாடிய 'கோயினான் மணிமாலை' யிலே யுள்ள பகுதிகள் சிலவும் அத்வைதத்தோடு பொருத்தமுடையவையாகக் காணப்படுகின்றன.

1. கண்ணிற் காண்பதெவ் வுலகினுங் காண்பன வெல்லா
நீயே யாகிநின்ற தோர் நிலையே. (24)

2. நுரையுந் திரையு நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
யெண்ணில வாகி யிருங்கட லடங்குந்
தன்மை போலச் சராசர மனைத்து
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கு நீ
யொன்றினுந் தோன்றா யொன்றினு மடங்காய். (24)

3. ..........................................மாயப்
பேய்த்தேர் போன்று நீப்பரு முறக்கத்துக் (24)
கனவே போன்று நனவு பெயர்பெற்ற
மாட வாழ்க்கையை...........................

4. *அரியை சல எம்பெரும் தெரிவுறில்*
*உண்டாய் தோன்றுவ யாவையு நீயே.* *(82)*

*என்றுள்ள பகுதிகள் பேய்த்தேர் போலவும் கனவு போலவும் தோன்றுகின்ற இவ்வனைத்தும் ஒன்றேயாகிய பரம்பொருளே என்னும் அத்வைதவுண்மையைக் கூறுகின்றன. இவ்வுண்மையைப் பட்டணத்துப்பிள்ளையாரே திருக்கழுமல மும்மணிக் கோவை' யிலும்,*

*யாவையு மெனக்குப் பொய்யெனத் தோன்றி*
*மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை* *(10)*

*என்னும் அடிகளிலே வியக்தமாகக் கூறுகின்றார். மீண்டும், இவர் ' திருவிடை மருதூர் மும்மணிக் கோவை யிலே மாயப் படலம் நீங்கவே. ஞானத்தால் எல்லாம் அவனே என்று கண்டேன் என்று 'நின்னைக் காணாத மாந்தர் தன்னையும் காணாதார்' என்று ஜீவேசுவர ஐக்கியத்தை விளக்குகிறார்.*

*மாயப் படலங் கீறித் தூய*
*ஞான நாட்டம் பெற்றபின் யானு*
*நினைபெருந் தன்மையுங் கண்டேன், காண்டலு*
*மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே*
*னின்னிலை யனைத்தையுங் கண்டே னென்னே*
*நின்னைக் காணா மாந்தர்*
*தன்னையுங் காணாத் தன்மை யோரே.*

*மேலும் இவ்வாறே இவர்*

*........................ எவற்றையுர்*
*தானே யாகிநின்ற தற்பர!*
*தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்*
*தோற்றம் பிறிதிற் றோற்றாச் சுடர்முளை !*

*என்று கூறுகிறார்.*

அத்வைத சித்தாந்தத்திற்கே சிறப்பா யமைந்த மூர்த்தி ஐக்கியத்தை இவர். திருவொற்றியூர் ஒருபாவொருபது என்னும் பிரபந்தத்திலே எடுத்துக் காட்டுகிறார்.

அருவமு முருவமு மானா யென்றும்
திருவமர் மாலொடு திசைமுக னென்றும்
உளனே யென்றும் இலனே யென்றும்.......
இன்னவை முதலாத் தாமறி யளவையின்
மன்னிய நூலின் பன்மையுண் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை யாகி
யடையப் பற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநக ருடையோ யுருவே.

'வேதத்திலே பன்மையாகக் கூறப்பட்டதால் மாந்தர் ஒருவரோடு ஒருவர் பிணங்கியும் மயங்கியும் இருப்பதைக் கண்டு ஒன்றேயாக பிரும்மமே அவ்வவர்க்கு அவ்வவர் அறிந்த அளவைப்படி அவ்வவையாகித் தோன்றும் பளிங்கு போன்றது ஈசனது உருவம் என்று கூறுவது அத்வைத சித்தாந்தத்தையே விளக்குவதாகின்றது.

மூவிலையும் ஒரு தண்டமுடைய திரிசூலத்தை ஈசன் ஏந்தி யிருப்பது மும்மூர்த்திகளும் தானே என்று விளக்குவதற்கே என்பர் வேறொரு பாடலிலே,

மூவிலை யொருதாட் சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே.

காரைக்கால் அம்மையாரும் ஞேய ஞாதிரு ஞானங்களின் ஐக்கியத்தைக் கூறி எல்லாம் சித்ஸ்வருபமே என்னும் அத்வைத சித்தாந்தவுண்மையை விளக்குகின்றார்.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற
மெய்ப் பொருளுந் தானே விரிசுடர் பாராகாசம்
அப் பொருளுந் தானே அவன்.

அற்புதத் திருவந்தாதி 20.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

।। ஓம் ப்ரஹ்மவித்யாநிஷ்டாய வேதாந்தபாஸ்கராய நம: ।।

**ப்ரஹ்மவித்யா ரஹஸ்யா ச நிகூடா பாபநாசினீ**

**தயா ச லபதே மோக்ஷம் தீரோ வேதாந்தபாஸ்கர: ।।**

பிரம்ம வித்யை இரகசியமானதும், மறைந்து இருக்கக் கூடியதும், சகல பாவங்களைப் போக்கக் கூடியதுமாக இருக்கிறது. இந்த வித்யையினாலேயே மோக்ஷத்தை அடைகிறான்.

## 11. இது பிரம்ம வித்யையின் மகிமை !

**அதீஹி பகவன் ப்ரஹ்மவித்யாம் வரிஷ்டாம்**
**ஸதா ஸத்பி: ஸேவ்யமானாம் நிகூடாம் ।**
**யதாSசிராத் ஸர்வபாபம் வ்யபோஹ்ய**
**பராத்பரம் புருஷம் யாதி வித்வான் ।।**

**கைவல்யோபநிஷத் 1-1**

*பிரும்ம தேவனின் அருகில் சென்று ஆசுவலாயன மகரிஷி இங்ஙனம் பிரார்த்திக்கிறார். ஓ பகவானே, எப்பொழுதும் சத்புருஷர்களினால் சேவிக்கக் கூடியதும், இரகசியமானதும், மிகவும் சிரேஷ்டமானதும் ஆகிய பிரம்ம வித்யையை எனக்குக் கிருபையுடன் அருளுவீர். ஏனென்றால் பிரம்ம வித்யையினால் மனிதன் எல்லா பாவங்ளையும் நாசம் செய்து, பராத்பரனாக இருக்கக் கூடிய பரமாத்மனை அடைந்து விடுகிறான்.*

பிரம்மவித்யை என்பது சாதாரணமான செல்வம், அதிகாரம் போன்ற பலன்களை அளிக்கும் வித்யை அன்று. இது மிகவும் உயர்ந்த வித்யையாகும். ஸத் புருஷர்கள் எப்பொழுதும் மனனம் செய்யக் கூடியதே பிரம்ம வித்யை. பிரம்ம வித்யையினால் நமக்குக் கிடைக்கும் பலன் என்ன ? புண்ணிய பாவங்களைச் சுட்டுப் பொசுக்கி, பரம் புருஷார்த்தமான மோக்ஷத்தை அளிக்கிறது. பிரம்மமே ’நான்’ என்ற தெளிவு உண்டாகி அவன் பிரம்மமே ஆகிறான். இதுவே பிரம்ம வித்யையின் மகிமை!

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

தர்ம சாஸ்த்ரங்களும், புராணங்களும், இதிஹாஸங்களும் நேர்மையைப் பற்றி விரிவாகப் பேசும். நேர்மை இல்லாதிருத்தலை இகழும். வஞ்சகத்தன்மையை சாடும். இருப்பினும் வஞ்சகம் வெல்லும்படியாகத்தான் உலகம் உள்ளது. ஆனால் அதிலேயும் இறுதியில் நேர்மை வெல்லும். அதன் ஆச்சர்யம்.

இப்படி ஆரம்பித்தார் பௌராணிகர். சிஷ்யனும் ஆவலுடன் அவர் எந்தக் கதையைச் சொல்லப் போகிறார் என்று கேட்க அமர்ந்தான். பொராணிகர் பேசலுற்றார். சோழவள நாடு. எங்கேயும் வளம். அங்கே எயினனூர் என்று ஓர் ஊர். ஈழர் குடியில் பிறந்தவர் நமது கதாநாயகர். வாள் போரில் சிறப்புத்தன்மையை காட்டினவர். அதனாலேயே அவருக்கு அரசர் ‘ஏனாதி’ என்னும் சிறப்புப் பட்டம் அளித்தார். மறவருக்கு வாள் வீச்சு அதன் நுணுக்கங்கள் பற்றி ஏனாதி நாயனார் தினமும் பயிற்சி அளித்து வந்தார்.

பல மாணாக்கர்களை உருவாக்கினார். அதன் மூலம் வந்த வருவாயை சிவார்ப்பணம் செய்தார். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தார். விபூதியின் மகிமையை எங்கும் எடுத்துச் சொன்னார். சிவன் பெருமையை எங்கும் பறை சாற்றினார்.

அதே ஊரில் அதிசூரன் என்பவனும் வாள் பயிற்சி தருபவனாக இருந்தான். தன்னை விட சிறந்த ஆசான் இல்லை என்னும் இறுமாப்பில் இருந்தவன். வாள் பயிற்சி கற்க விரும்பினோர் ஏனாத்யிடம் தான் போனார்கள். இவனிடம் மாணவர்கள் வரவில்லை. ஏனாதியின் வருமானம் அதிகரித்தது. அதிசூரனின் வருமானம் குறைந்தது. பொறாமைத் தீ அவன் மனசில் எழுந்தது. எப்படியாயினும் ஏனாதியை போரில் தோற்கடித்து அவர் பெருமையைக் குறைத்தால் தன் புகழ் பெருகி வருமானமும் வரும் என்று எண்ணி தன்னுடைய படையோடு அவரை எதிர்த்தான். அவனது போர் குரல் கேட்டு எனாதியாரும் அவரது சிஷ்யர்களும் போருக்குப் புறப்பட்டனர். போரில் வெல்பவர் தான் வாள் பயிற்சி சொல்லித் தர உரைஅமியாளர் என்று அதிசூரன் கூற அவரும் ஒத்துக் கொண்டார். கடுமையான போர் இருதரப்பிலும் நிகழ்ந்தது. ஏனாதியின் போர் புரிதலை அதிசூரனால் தாங்க முடியவில்லை. வஞ்சகத்தால் அவரை வெல்ல நினைத்தான். நாளை காலை நாம் இருவர் மட்டும் போர் புரிவோம் என்று கூறி வெளியேறினான்.

விபூதி அணிந்தவனிடம் போர் புரிய மாட்டார் ஏனாதி என்று அவனுக்குத் தெரியும். எனவே விபூதி அணிந்து கொண்டு தன் நெற்றியை கேடயத்தால் மறைத்துக் கொண்டு


போர் புரிய வந்தான். இருவருக்கும் போர் முற்றியது. அவரால் தான் மாய்க்கப்படும் நிலையில் தன் கேடயத்தை எடுத்தான். பாவம் ஏனாதி. விபூதியைக் கண்டார். அவனைக் கொல்லாது எதுவும் செய்யாது நின்றார். முத்தனாதன் எப்படி அரசனைக் கொன்றானோ அப்படியே அதிசூரனும் ஏனாதியைக் கொன்றான். அவன் வஞ்சகம் நிறைவேறினாலும் சிவ கடாக்ஷம் பெற்ற ஏனாதி நாதர் சிவ ஸாயுஜ்யம் பெற்றார்.

இக்கதையிலும் வஞ்சகம் வென்றாலும் சிவனடியார் ஏனாதியின் புகழ் உலகுக்கு விளங்கிற்று. முதலில் வெல்வது வஞ்சகம். பின்பு வெல்வது மட்டுமல்ல நிலைத்து நிற்பது உண்மை என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

கே. ஆர். துரைராஜ்



நான் மதுரை வருமான வரி இலக்காவில் வேலை பார்த்த போது ஸ்வாமிகள் பீடாதிபதியாக இருந்தார். சேதுபதி பள்ளிக் கூடத்தில் முகாமிட்டிருந்தார். அவரைதர்சிக்க பழம், பூ, தேங்காய் இவைகளை எடுத்துக் கொண்டு ஒரு நாள் சென்றேன். நான் சென்ற சமயம் வெளியிலிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தார்.

பக்தர்கள் கூட்டம் அவர் பின் சென்று கொண்டிருந்தது. மிகவும் குறுகலான இடம். நான் இருந்த இடத்திலேயே தட்டைக் கீழே வைத்துவிட்டு நின்று கொண்டு வணங்கினேன். ஸ்வாமிகள் என்னைக் கவனித்துவிட்டார்கள். என் பக்கம் திரும்பி என்னை நன்றாகக் கீழே விழுந்து வணங்க அனுமதி கொடுத்தார்கள். சிறிது நேரம் என் முகத்தையே பார்த்து கண்ணினால் கடாக்ஷம் புரிந்தார்கள். அவருடைய எல்லையில்லாக் கருணையை எண்ணி வியந்தேன்.

நான் ரிடையர் ஆனபின் காஞ்சியில் குடியேறினேன். அன்றிலிருந்து தினம் ஸ்வாமிகளை தர்சிக்கச் செல்வேன். நான் தரும் புஷ்பத்தை மோந்து பார்த்து அல்லது தலையில் வைத்து ஆசீர்வாதம் செய்வார்கள். பழம் தந்து அருளுவார். எனக்கு ஆனந்தம் மேலிட்டு கூத்தாடுவேன். இதை ஸ்வாமிகள் அப்பர் பெருமான் பாடிய 'நிலை பெறுமாறெண்ணி''என்று தொடங்கும் பாடலை நினைவு கூர்ந்து பக்தர்கள்

முன் விமர்சித்து என் பக்தியை பாராட்டி என்னை உற்சாகமூட்டி ஆன்மீகத்தை மேலும் வளர்க்க அருள் செய்தார்.

ஒரு ஸமயம் ஸ்ரீ மடத்திற்கு அவரைப் பார்க்க சென்றிருந்தேன். பல ப்ரமுகர் களிடம் அவர் பேசிக்கொண்டிருந்தார். அங்கு இருந்த போலீஸ்காரர் என்னை உள்ளே விடவில்லை. நான் மௌனமாய் நின்று கொண்டிருந்தேன். என்னைக் கவனித்துவிட்ட ஸ்வாமிகள் ஸம்பாஷணையை நிறுத்திவிட்டு என்னைக் கூப்பிட்டார்கள். திகைத்துப் போய் என் புஷ்பக் காணிக்கையை ஸமர்ப்பித்தேன். அதை ஏற்று ஆசீர்வாதம் செய்தார்கள்.

இன்னொரு ஸமயம் நான் அவரை தர்சிகப்போனபோது ஆசி வழங்கியபின் 'உனக்குச் சொத்து இருக்கா?' என்று கேட்டார். நான் 'இல்லை காமாக்ஷிதான் என் சொத்து' என்றேன். 'பென்ஷன் எவ்வளவு வருகிறது' என்று மீண்டும் கேட்க பதிலைப் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதம் செய்து அனுப்பினார். எனக்கு மன வருத்தம். ஆன்மீகத்தை விட்டு எதற்கு லௌகீகமாக சொத்து இருக்கா என்று கேட்டார் என்பதால். ஆறு மாதம் கழித்து என் மகள் நிலம் வாங்கி கட்டிடம் கட்டி புதுமனை புகுந்தாள். ஸ்வாமிகளின் கருணையால் இந்த சொத்து கிடைத்தது . இது நான் செய்த பாக்யம்.

சென்னைப் பட்டணத்தில் காளிதாஸ் நாடார் சொன்ன அனுபவம். நான்கு பேர் பெரியவரை தர்சிக்கச் சென்றனர். ஆசீர்வாதம் செய்த பின் ஒருவரைத்தவிர மூன்று பேரிடமும் சொத்து இருக்கா என்று கேட்டார். சில காலம் கழித்து அந்த மூன்று பேறும் நில புலன்கள் வாங்கி சொத்துக்கு அதிபதியானார்கள். ஞானியின் போக்கு விசித்ரமானது. அவரது கடாக்ஷத்திற்கு நான் பாத்ரமானேன். அதுவே நான் செய்த பாக்யம்.

**வாள்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று ।। 10 ।।**

மழை இடைவிடாமல் பெய்வதால் உலகில் உள்ள உயிர்கள் நிலைபெற்று வருகின்றன. ஆதலால், அம்மழைநீர்தான் மரணத்தைத் தடுக்கும் மருந்து என அறிய வேண்டிய பான்மை உடையதாகும்.

இறைவா மேகங்கள் சரியான காலத்தில் சரியான அளவில் மழை பொழியட்டும்.

*(ஸ்வஸ்தி வசனம்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## ஸௌப்திக பர்வம்



துரியோதனன் இறக்கும் தருவாயில் இருக்க அதற்கு அஸ்வத்தாமன் எப்படி பாண்டவர்களை பழிவாங்குகிறான் என்பதை இந்த பர்வம் பேசும். நான் இன்றிரவு பாண்டவர்களை நிர்மூலமாக்குவேன் என்று சபதமிட்டான் அஸ்வத்தாமன். கோரமான ஸம்பவம் வருவதைத் தெரிவிப்பது போல் சூர்யன் மறைய அந்தகாரம் வன மிருகங்களின் ஓலத்துடன் எங்கும் சூழ்ந்தது.

க்ருதவர்மனிடமிருந்தும் க்ருபரிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்ட அஸ்வத்தாமன் வன்மத்துடன் பாண்டவர்களின் பாசறையை அடைந்து த்ருஷ்டத்யுமனைத் தேடினான். உறங்கிக் கொண்டிருந்த த்ருஷ்டத்யுமனையும், அங்கு உறங்கிகொண்டிருந்த வீரர்களையும் வஞ்சக மனத்தான் கொன்று வீழ்த்தினான். அங்கே உறங்கிக் கொண்டிருந்த த்ரௌபதியின் புத்ரர்களையும் கொன்று வீழ்த்தினான். சிகண்டியை எதிர்க்கொண்டு அவனையும் கொன்றான். க்ருபரும் க்ருதவர்மனும் பாண்டவ பாசறைக்கு தீயிட்டனர். அரை இரவில் பாண்டவர்களின் சந்ததியை அஸ்வத்தாமன்

அழித்தான். அந்த மூவரும் மிக்க மகிழ்ச்சியுடன் துர்யோதனன் இருக்கும் இடத்திற்குச் சென்றனர்.

அஸ்வத்தாமன் : '' துர்யோதனா ! கேள். பாண்டவர்களில் ஏழு பேரும் கௌரவர்களில் நாங்கள் மூன்று பேரும் மிச்சமாயிருக்கிறோம். பாஞ்சாலர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். பாண்டவர்களின் புத்ரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அவர்கள் உறங்கி கொண்டிருந்தபோதே கொல்லப்பட்டனர்.''

துர்யோதனன் : ''அஸ்வத்தாம! நீங்கள் மூவரும் செயற்கரிய செயலை செய்து விட்டீர்கள். பீஷ்மரால் செய்யப்படாதது, த்ரோணரால் செய்யப் படாதது.' என்று கூறி உயிரை விட்டான்.

பாண்டவர்களின் கோர நாசத்தைக் கேட்ட யுதிஷ்டிரர் துக்கத்தில் ஆழ்ந்தார்.

யுதிஷ்டிரர் முதலில் ஜயிக்கப்பட்டோம், அவர்கள் ஜயித்தனர். ஜயித்துக் கொண்டே ஜயிக்கப்பட்டோம். நமது கவனக் குறைவினால் நிகழ்ந்தது இது. கர்ணனால் வீழ்த்தப்படாத நம் புத்ரர்கள் கவனக் குறைவினால் அழிந்தனர். அந்தோ! பெரிய வணிகர்கள் கடல்களைத் தாண்டியபின் சிறு வாய்க்காலில் உயிரை விடுவது போன்றது நம் கவனக் குறைவு.

யுதிஷ்டிரரிடம் வந்த த்ரௌபதி தரையில் உருண்டு பிரண்டு அழுதாள். அரசே! அஸ்வத்தாமனின் தலையில் ஒரு மணி உண்டு. அவரைக் கொன்று அதை எடுத்து வரவும்'' என்று பணித்தாள். உடனே தர்மர் தன் அஸ்த்ரங்களுடன் அவனிருக்குமிடம் சென்றார். அங்கே ஈஷிகா அஸ்த்ரத்தை எடுத்து அஸ்வத்தாமன் 'இது பாண்டவர்களை நாசமாக்கட்டும் 'என்று கூறி ப்ரயோகம் செய்ய க்ருஷ்ணர் அர்ஜுனா ! நீ உன் அஸ்த்ர ப்ரயோகத்தை அந்த அஸ்த்ரத்திற்கு எதிராகச் செய்'' என்று ஆணையிட அவனும் சிவபெருமானைத் த்யானம் செய்து அஸ்த்ரத்தை விடுத்தான். இரு பெரும் அஸ்த்ரங்களும் பெரும் நாசம் விளைவிக்கும் என்பதை அறிந்த வ்யாசர் இருவரையும் அஸ்த்ரங்களைத் திரும்பிப்பெறக் கோரினார்.

(தொடரும்)

# தசாவதார ஸ்தோத்ரம்

# दशावतार स्तोत्रम्

ஜயதேவர்

प्रळयपयोधि जले ध्रुतवानसि वेदम् विहित वहित्र चरित्र मखेदम्
केशव ध्रुत मीन शरीर जय जगधीश हरे जय जगधीश हरे ।। १ ।।

**ப்ரளய பயோதி ஜலே த்ருதவானஸி வேதம் விஹித வஹித்ர சரித்ர மகேதம்**
**கேஸவத்ருத மீன ஸரீர ஜய ஜகதீஸ ஹரே ! ஜய ஜய ஜகதீஸ ஹரே! ॥1॥**

*ஹே ! கேசவனேனாயஸமாக ஊழிப் பெரும் வெள்ளத்தில் மீனாவதாரமாய் வேதங்களை நாவம் போல் காப்பாற்றினாய். ஜகதீசனே உனக்கு ஜயம் ஜயம்.*

क्षितिरति विपुलथरे तिष्ट्ति प्रुष्टे धरणि ध्रणकिण चक्रगरिष्टे
केशव ध्रुत कच्छप रूप जय जगधीश हरे जय जगधीश हरे ।। २ ।।

**க்ஷிதிரதி பிபுலதரே தவ திஷ்டதி ப்ருஷ்டே தரணிதரனகிண சக்ர கரிஷ்டே**
**கேசவத்ருத கச்சப ரூப ஜய ஜகதீச ஹரே ஜய ஜகதீஸ ஹரே ॥ 2 ॥**

*ஹே! கேசவனே ஆமை ரூபத்தில் உன் முதுகில் இந்த பூமியை தாங்கி அதைக் காப்பாற்றினாய். ஜகதீஸனே உனக்கு ஜயம் ஜயம்.*

वसति दशनशिखरे धरणी तव लग्ना शशिनि कलनकलेव निमग्ना
केशव ध्रुत सूकर रूप जय जगधीश हरे जय जगधीश हरे ।। ३ ।।

**வஸதி தஸன சிகரே தரணீ தவ லக்னா ஸசினி கலங்கலேவ நிமக்னா**
**கேஸவ த்ருத ஸூகர ரூப ஜய ஜகதீஸ ஹரே ஜய ஜகதீஸ ஹரே ॥ 3 ॥**

*ஹே! ஹரே! வராஹ ரூபமாய் நீ அவதரித்தாய். உன்னுடைய தெற்றிப் பல்லில் இந்த பூமி சந்த்ரனில் மறு போல் விளங்குகிறது. ஜகதீஸனே உனக்கு ஜயம்.*

तव करकमलवरे नखमदभुतश्रुन्गम् दलित हिरण्यकशिपु वरभ्रुन्गाम्

केशव धृत नरहरि रूप जय जगधीश हरे जय जगधीश हरे ।। ४ ।।

**தவ கரகமலவரே நகமதத்புதஸ்ருங்கம் தலித ஹிரண்யகஸிபு வர ப்ருங்கம்**
**கேசவத்ருத நரஹரி ரூப ஜய ஜகதீஸ ஹரே ஜய ஜகதீஸ ஹரே**

*ஹே கேஸவ ! நரஹரி ரூபமாய் அவதரித்தபோது உன் கர கமலத்தில் பத்து நகங்களில் ஒரு பூச்சி போல் ஹிரண்ய கஸிபு மாண்டான். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

छलयसि विक्रमणे बलिमद्भुत वामन पद नीरजनित पावन

केशव धृत वामन रूप जय जगधीश हरे जय जगधीश हरे ।। ५ ।।

**சலயஸி விக்ரமணே பலிமத்புத வாமன பத நக நீரஜனித ஜன பாவன**
**கேஸவ த்ருத வாமன ரூப ஜய ஜகதீஸ ஹரே ஜய ஜகதீச ஹரே !**

*ஹே ஹரி ! பலி அரசனை வாமனனாய் வந்து ஆட்கொண்டாய். மூன்று அடியில் இவ்வுலகம் அளந்தாய் லோக பாவனீ கங்கை உன் பாத கமலத்திலிருந்து ப்ரவஹித்தாள். ஜகதீசனே உனக்கு ஜயம்.*

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் ।। 11 ।।**

*காலமனைத்திலும் நிறைந்திருக்கின்ற கடவுளுடைய திருவடிகளைச் சார்ந்திருப்பவர்கள் பிறப்பு, இறப்புச் சூழல் நிறைந்த பெருங்கடலைக் கடப்பார்கள். இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்திராதவர்கள் பிறப்பு, இறப்புச் சூழல் நிறைந்த பெருங்கடலை கடக்க மாட்டார்கள்.*

*என்பால் சித்தத்தை வைத்தோரை விரைவில் பிறவிப் பெருங்கடலில் இருந்து மீட்கிறேன்.*

*(ஸ்ரீமத் பகவத் கீதை : 12-7)*

*சரணம் என்று என்னை நாடி வந்தவனை ஒரு போதும் கைவிட மாட்டேன். இவனால் என் உயிரே போகும் என்றாலும் இவனைக் கைவிட மாட்டேன். இவனைக் காக்க வேண்டியது என் கடமை.*